Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 1






35ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM
email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com




நிதி: 35 பாலம்: 15 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2025

# கனடிய முதல்வர்கள் நாம் பிரதமருக்குப் பின்னால் நிற்கிறோம்

கனடாவிற்கும், ஒவ்வொரு மாகாணத்திற்கும், பிரதேசத்திற்கும் நியாயமான மற்றும் சுதந்திரமான வர்த்தக ஒப்பந்தம் இருப்பதை உறுதி செய்வதற்காக நாங்கள் பிரதமருக்குப் பின்னால் நிற்கிறோம் என்று ஒன்ராறியோ பிரதமர் டக் ஃபோர்ட் 2025 ஜூலை 21இல் ஆரம்பித்து மூன்று நாட்கள் நடைபெற்ற கனடிய மாகாண மற்றும் பிரதேச முதல்வர்களுக்கான கூட்டமைப்பு ஆலோசனை சபை (Council of Federation) மாநாடு முடிவில் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

கனடிய முதல்வர்களுக்கான கூட்டமைப்பு ஆலோசனை சபையின் தற்போதைய தலைவராக இருக்கும் ஒன்ராறியோ மாகாண முதல்வர் இம்மாநாட்டை நடத்துவதற்கு ஒன்ராறியோ மாகாணத்தின் கிராமப்புறச் சூழலை ஏனைய கனடிய முதல்வர்களுக்குக் காட்டுவதற்காக ஒன்ராறியோவின் மஸ்கோகா (Muskoka) பிரதேசத்திலுள்ள ஹன்ட்ஸ்வில் (Huntsville) நகரில் இருக்கும் Deerhurst Resortஐ தெரிவு செய்திருந்தார். இதன் அருகில்தான் டக் ஃபோர்ட்இனுடைய தனிப்பட்ட கோடைகால விடுமுறை வதிவிடமும் (Cottage) இருக்கிறது.

கனடிய முதல்வர்கள் தலைமையில் கோடை காலங்களில் நடைபெறும் அவர்களுக்கான இக்கூட்டமைப்பு ஆலோசனை சபை மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் முதல்வர்களிடையே ஓர் நட்புரீதியான போட்டி (Friendly Competition) நடைபெறுவது வழக்கம். அது அவர்கள் தங்கள் மாகாணத்தில் மிகச் சிறந்த இடத்தில் இம்மாநாட்டை நடத்தி மற்றைய தலைவர்களை பிரமிக்க வைக்கவேண்டும் என்பதாகும். 1896ஆம் ஆண்டிலேயே ஆங்கிலேய தொழில்முனைவர் Charles Waterhouseஆல் ஆரம்பித்து வைக்கப் பட்ட நீர் கரையில் உள்ள இந்தக் கோடைகால விடுமுறை வதிவிடம் தற்போது 1,000 பேர் தங்கக்கூடிய ஒரு கோடைகால விடுதியாக 800 ஏக்கர் பரப்பளவில் இருக்கிறது. டக் ஃபோர்ட் இவ்விடத்தைத் தனது தலைமையிலான மாநாட்டிற்குத் தெரிவு செய்ததன் மூலம் சில மாகாண முதல்வர்களையாதல் பிரமிக்க வைத்திருப்பார் என ஊடகவியலாளர் தெரிவிக்கின்றனர். ஜூலை 21ஆம் திகதி கனடிய முதல்வர்கள் கூட்டமைப்பு ஆலோசனை சபை மாநாட்டிற்காக மஸ்கோகா பிரதேசத்தின் ஏரிகள் மற்றும் காடுகளுக்கு மத்தியில் அமைந்திருக்கும் இந்த Deerhurst Resortஇற்கு வாகனத் தொடரணி (Convoy) மூலம் கனடிய முதல்வர்கள் அழைத்து வரப்பட்டனர்.



The Canadian premiers speak to the media at Deerhurst Resort in Huntsville.

Thanks: Nathan Denette / The Canadian Press.

ரொறொன்ரோவிலிருந்து 215 கிலோ மீற்றர் தூரத்தில் வடக்கே இருக்கும் இவ்விடுதிக்குக் கனடிய முதல்வர்கள் அழைத்து வரப்படும்போது அவர்கள் வரும் பாதையில் உள்ள நகரங்களில் இருக்கும் மேம்பாலங்களில் கனடிய மாகாணங்கள் மற்றும் பிரதேசங்களின் கொடிகளுடன் "கனடாவின் முதல்வர்களை Barrie ஒன்ராறியோ வரவேற்கிறது" போன்ற பதாகைகள் கட்டப்பட்டிருந்தன. கனடிய முதல்வர்களை வரவேற்ற ஒன்ராறியோ முதல்வர், "ஒரு சிறந்த நகரமான ஹன்ட்ஸ்வில்லிற்கு உங்கள் எல்லோரையும் வரவேற்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அடுத்த இரண்டு நாட்களும் நாங்கள் ஒன்றாக இங்கு கூடியிருப்பதை எண்ணி நாங்கள் எல்லோருமே மிகவும் உற்சாகமாக இருக்கிறோம்" என்றார். இந்த கனடிய முதல்வர்களுக்கான மாநாட்டில் வர்த்தகம், எரிசக்தி, குடியேற்றம் மற்றும் அமெரிக்க-கனடிய உறவுகள் உட்பட பல விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இரண்டாம் நாள் கனடிய முதல்வர்கள் கனடியப் பிரதமருடன் கலந்துரையாட ஒரு சிறப்புக் கூட்டம் இந்த விடுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்த பிரதமர் உடனான கூட்டத்தில் கனடியப் பிரதமர் கனடிய-அமெரிக்க வர்த்தக பேச்சு வார்த்தைகள் எவ்வாறு செல்லுகிறது என விளக்கம் அளித்தார். இப்பேச்சு வார்த்தை களின்போது சுங்கவரிகள் விதிக்கப்பட்டால் எவ்வாறு மாகாண அரசுகள் இணைந்து செயல்படவேண்டும் எனவும் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

மாநாட்டின் முதலாம் நாளான திங்கட் கிழமை மாலை டக் ஃபோர்ட் மாநாடு நடைபெறும் Deerhurst Resortஇற்கு அருகில் உள்ள தனக்குச் சொந்தமான கோடைகால விடுமுறை வதிவிடத்தில் கனடிய முதல்வர்கள் அவர்களுடைய நெருங்கிய குடும்பத்தினர்களுக்கு ஓர் இரவு விருந்தை அளித்தார். அவ் விருந்தின்போது பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் David Ebyஇற்கு பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டு Cake உம் வெட்டப்பட்டது.

இரண்டாம் நாள் மாநாடு ஆரம்பித்தபோது பேசிய டக் ஃபோர்ட், முதல்நாள் இரவு நடைபெற்ற இரவு விருந்தைப்பற்றி கூறி அத்துடன் தான் ஓர் உண்மையை வெளிப்படையாகக் கூறவேண்டும் (Full disclosure) "பிரதமர் நேற்று இரவு என்னுடைய விடுமுறை வதிவிடத்தில் தான் தங்கியிருந்தார். நாங்கள் இரவு உணவின் பின்னர் இரவு 12:30 மணி வரை விழித்திருந்தோம். நெருப்பிற்கு அருகில் (Fireplace) அரட்டை அடித்துக் கொண்டே உலகின் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து விட்டோம்" என்றார்.

கனடியப் பிரதமர் மார்க் கானி இரண்டாம் நாள் காலை கனடிய முதல்வர்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஒட்டாவா திரும்பினார். கனடிய முதல்வர்களது கூட்டமைப்பு ஆலோசனை சபை மாநாடு தொடர்ந்து நடைபெற்றது. கனடியப்பிரதமர் ஊடகவியலாளர்களுக்கு ஹன்ட்ஸ்வில்லில் தெரிவிக்கையில், "அமெரிக்க அரசின் காலக்கெடுவான ஒகஸ்ற் முதலாம் திகதியைவிட அமெரிக்காவுடன் ஒரு சிறந்த ஒப்பந்தத்தைப் பெறுவதே முக்கியம். இப்பேச்சுவார்த்தைகள் சிக்கலானது (complex) எமக்குத் தேவையான முழு நேரத்தையும் எடுத்தே நாங்கள் பேச்சுவார்த்தைகளை நடத்துகிறோம்.

கனடியர்களின் நலன்களுக்காக ஓர் ஒப்பந்தம் முன்வைக்கப்பட்டால் எமது அரசாங்கம் அதற்கு ஒப்புக்கொள்ளும். அத்தகைய ஒப்பந்தம் கனடாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான வர்த்தக உறவைப் பாதுகாக்கும், வலுப்படுத்தும் மற்றும் உறுதிப்படுத்தும். நாம் செய்யக் கூடிய பிறவிடயங்களில் நமது கைகளைக் கட்டாததாகவும் இருக்கும்" என்றார்.

கனடியப் பிரதமர் மேலும் தெரிவிக்கையில், "கனடா-அமெரிக்கா வர்த்தக அமைச்சர் டொமினிக் லெப்லங்க்

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 2



# House for Sale / Lease / Condo / BSMT

## House for Sale

(Morningside / Sewells)
3Bedroom
1Bedroom
Basement Unit
with
Separate Entrance

Possible Rental Income
Main & 2nd Floor $ 2900 +
Basement $ 1500 +
Asking $ 875,000
Easy Access to TTC / Hwy / School

George Paranthaman **
Call : 416 277 9044

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000

Deepak Dani **
Call : 416 930 9733

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / Hwy 401

Tridel Building

Gulshan Sharma **
Call : 416 407 5911

## Condo for Rent

2 BR Condo
2 Wash Rooms
Kennedy / Eglinton

Walk to
Kennedy Subway

Tisi Para *
Call : 647 296 0596

## House for Sale

Pharmacy & Finch

* Freehold Town Homes
* 4 Bedrooms
* 3 Washrooms
* Basement Unit
* Separate Entrance
* Kitchen
* Completely renovated
* Read to Move -in.

$ 849,00

Anu Jeyanantham *
Call : 647 505 4642

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

Tel: 416-321-6969

* Sales Rep.
** Broker

* Independently owned and operated.

Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 3





Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# அனுரவின் வெளிநாட்டுப் பயணங்கள்

## – அரவின் –

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது ஆறாவது வெளிநாட்டுப் பயணத்தை மாலைதீவுக்கு மேற்கொண்டிருக்கிறார். அவர் கடந்த செப்ரெம்பர் மாதம் ஆட்சிக்கு வந் பின்னர், இந்தியா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், வியட்நாம், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குப் பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

பத்து மாதங்களில் அவர் 6 நாடுகளுக்கு மேற்கொண்டுள்ள இந்தப் பயணங்களின் மூலமாக எதனைச் சாதித்திருக்கிறார்?

ஒரு நாட்டின் தலைவர் அயல்நாடுகள் மற்றும் உலக நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது என்பது ஒரு மரபார்ந்த வழக்கம். இத்தகைய பயணங்களின் ஊடாக நாடுகளுக்கிடையில் உறவுகள் பலப்படுத்தப்படும். வர்த்தகங்கள் மேம் படுத்தப்படும். முதலீடுகள் மற்றும் ஏனைய வாய்ப்புகளும், தொடர்புகளும் ஏற்படுத்திக் கொள்ளப்படும். அதனால் எப்போதும் ஜனாதிபதி வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொள்கின்றபோது, கூடவே தமது நாட்டைச் சேர்ந்த குழுவினரையும் அழைத்து செல்வது வழக்கம்.

அது வர்த்தகத் தொடர்புகள், முதலீடுகள் போன்றவற்றை பெற்றுக் கொள்வதற்கும், வலுப்படுத்திக் கொள்வதற்கும் உதவக் கூடியதாக இருக்கும். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்கள் என்பது 'ஓசி'யில் வெளிநாடு சுற்றிப் பார்க்கின்ற ஒன்றாக மாறிவிட்டது. ஜனாதிபதியுடன் அவரது பாரியார் அல்லது குடும்பத்தினர், வெளிநாட்டுப் பயணங்களில் பங்கேற்பதில்லை. இது வரவேற்கத்தக்க ஒன்று.

முக்கியமான ஓரிரண்டு அமைச்சர்களும் அதிகாரிகளும் மாத்திரமே பங்கேற்கின்ற னர். இது வீண் செலவை குறைக்கின்ற ஒரு நடவடிக்கை என சொல்லப்படுகிறது.

இதற்கு முன்னர் இருந்த ஜனாதிபதிகளை போல தாங்கள் செலவுகளை செய்ய வில்லை, வெளிநாட்டுப் பயணங்களுக்காக பணத்தை வாரி இறைக்கவில்லை என்று, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களை நம்ப வைக்க முற்படுகிறது.

முன்பிருந்த ஜனாதிபதிகளின் செலவுகள் குறித்து கேள்வி எழுப்பிவிட்டு தாங்களும் அதேபோல நடந்து கொண்டால், எதிர்க் கட்சிகளுக்கு பதிலளிக்க வேண்டிய நிலை வரும் என தேசிய மக்கள் சக்தி கருதுவதில் ஆச்சரியமில்லை.



ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ இருந்தபோது, ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு, தனி விமானத் தில் 72 பேருடன் அமெரிக்காவுக்குப் பயணம் செய்திருந்தார்.

அவர் வெளிநாட்டுப் பயணங்களுக்காக பெருமளவு பணத்தை வீணடித்தார்.

அதன்மூலம் அவர் நாட்டுக்கு முதலீட்டை யோ வருமானத்தையோ கொண்டுவந்து சேர்த்திருக்கவில்லை.

இது ஒரு பெரும் சர்ச்சையாக அவருக்கு எதிரான குற்றச்சாட்டாக முன்வைக்கப்பட் டது. ஆனால் அதற்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு இருக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க தொடர்பாகவும் இத்தகைய குற்றச் சாட்டுகள் இருந்தன. அவர் பரிவாரங்களு டன் பயணங்களை மேற்கொள்ளா விட்டாலும் அதிகளவில் பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

இதனை ஒரு குற்றச்சாட்டாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்வைத்த போது அனுரகுமார திசாநாயக்கவின் வெளிநாட்டுப் பயணச் செலவுகள் தொடர் பாக எதிர்க்கட்சியினரால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதையடுத்து, இந்தியா, சீனா, டுபாய் பயணங்களுக்கு வெறுமனே 1.8 மில்லியன் ரூபா மட்டுமே செலவு ஏற்பட்டதாகக் கடந்த மார்ச் மாதம் அரசாங்கம் கணக்குக் காட்டியது.

இந்தியப் பயணத்திற்கு மட்டும் அதிக பட்சமாக, 1.2 மில்லியன் ரூபாவும், சீனப் பயணத்திற்கு, 386,000 ரூபாவும், டுபாய் பயணத்திற்கு 279,970 ரூபாவும் செலவு ஏற்பட்டதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியிருந்தார்.

சீனா, டுபாய் பயணங்களுக்கு, அந்த நாடுகளே விமானச் சீட்டுச் செலவுகளை யும் ஏற்றுக் கொண்டிருந்தன.

இதற்குப் பின்னர், வியட்நாமுக்கு பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க, உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிப்பதற்காக, தனிப்பட்ட ஜெட் விமானத்தில் நாடு திரும்பியிருந்தார்.

வியட்நாமில் உள்ள அமைப்பு ஒன்றே அதற்கான செலவுகளைப் பொறுப்பேற்ற தாக அரசாங்கம் கூறியது.

முதல் நான்கு பயணங்களும் பெரும் பாலும் அரசாங்கத்துக்கு செலவுகளை ஏற்படுத்தாத பயணங்களாக இருந்தன.

ஜெர்மனிக்கான பயணம் தொடர்பான கணக்கு வழக்குகள் எதுவும் அரசாங்கத்தினால் காட்டப்படவில்லை.

மாலைதீவு அயலில் உள்ள நாடு. மிகச் சிறிய பொருளாதாரத்தைக் கொண்ட நாடு. அந்த நாட்டிடம் இருந்து பயணச் செலவுப் பணத்தை வாங்குவது இலங்கைக்கு நல்லதல்ல.

செலவுகள் இல்லாமல் அல்லது குறைந்த செலவில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட தலைவர் என்று தன்னைக் காட்டிக்கொள்ள முற்படுகிறார் அனுரகுமார. ஆனால் வெளிநாட்டுப் பயணங்கள் என்பது, குறைந்த செலவில் பயணங் களை மேற்கொள்வதே, தலைவர்களைச் சந்தித்துவிட்டு திரும்புவது மாத்திரமல்ல. அது நாட்டுக்கு எத்தகைய பயனைக் கொண்டு வருகிறது என்பதே முக்கியம்.

அரசியல், ராஜதந்திர, பொருளாதார, வர்த்தக ரீதியாகப் பயன்கள் கிடைக்க வேண்டும். அப்படியானால் வெளிநாட்டுப் பயணங்களின் மூலமாக அனுரகுமார திசநாயக்க நாட்டுக்கு எதனைக் கொண்டு வந்து சேர்த்தார்?

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்ட போது பாதுகாப்பு, ஒத்துழைப்பு, உடன்பாடு உள்ளிட்ட பல உடன்பாடுகள் செய்து கொள்ளப்பட்டன. அவற்றின் உள்ளடக்கம் வெளியிடப்படவில்லை.இன்று வரை அந்த ஒப்பந்தங்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படுகின்றன.

நாட்டுக்கு வெளிப்படுத்த முடியாத அல்லது வெளிப்படுத்தப்படாத ஒப்பந்தங் களைச் செய்துகொண்ட எந்தவொரு சிங்களத் தலைவரும், சிங்கள மக்களால் கொண்டாடப்படக் கூடியவராக இருக்க முடியாது. ஏனென்றால், அது நாட்டுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற கருத்து, சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கு சார்பான ஒப்பந்தத்தில் அவர் கையெழுத்திட்டிருக்கிறார் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டபோது சினோபெக் நிறுவனத்துடன் ஓர் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது.

கிட்டத்தட்ட 4 பில்லியன் டொலர் முதலீட்டில் அம்பாந்தோட்டையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவுகின்ற திட்டம் அது. இந்தத் திட்டம் இன்னமும் செயல்படுத்தப்படுமா இல்லையா என்ற கேள்வியில் இருக்கிறது.

ஏனென்றால், நாளொன்றுக்கு இரண்டு இலட்சம் பீப்பாய் எண்ணெயை சுத்திகரி க்கும் ஆற்றல்கொண்ட இந்த ஆலையில் இருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற 20 சதவீதம் எரிபொருளை உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்வதற்கு இணக்கம் தெரிவித்தே சீன நிறுவனம் உடன்பாட்டில் கையெழுத்திட்டது.

எஞ்சிய எரிபொருளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். ஆனால் இப்பொழுது சீன நிறுவனம் சுத்திகரிக் கின்ற எரிபொருளை இலங்கைச் சந்தை யில் விற்பனை செய்வதற்கு அனுமதிக்கும்படி கோருகிறது.

இதற்கு அரசாங்கம் இடமளிக்க முடியாத நிலையில் இருக்கிறது. ஏனென்றால் இந்தியாகூட முன்னர் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்தது.

ஐஓசி நிறுவனம் இலங்கை முழுவதற்கும் எரிபொருளை விநியோகிக்க முற்பட்ட பொழுது அதற்கு அரசாங்கம் அனுமதிக்க வில்லை. அதைவிட இப்போது இன்னொரு சிக்கல் முளைத்திருக்கிறது.

அமெரிக்காவின் பரஸ்பர வரியைக் குறைத்துக் கொள்வதற்கு இரு தரப்பு வர்த்தக இடைவெளியை குறைக்க வேண்டிய நிலை வந்திருக்கிறது.

அவ்வாறு குறைக்க வேண்டுமானால் அமெரிக்காவிடமிருந்து எரிபொருளை கொள்வனவு செய்வது மாத்திரமே இலங்கைக்குள்ள ஒரே வழி.

அந்த வழியைத் தேர்வு செய்தால் சீன நிறுவனத்திற்கு உள்நாட்டு சந்தையில் எரிபொருளை சந்தைப்படுத்துவதற்கு அனுமதி கொடுக்க முடியாது.

ஆக அனுரகுமார திசாநாயக்கவின் வெளிநாட்டுப் பயணங்கள் குறைந்த செலவில் மேற்கொள்ளப்பட்டவையாக இருந்தாலும், நாட்டுக்கு பயன் எதையா வது கொண்டு வந்திருக்கிறதா என்பது சந்தேகம்.

இன்னொரு விடயம், எந்த ஒரு நாட்டின் தலைவரும் சொந்த கௌரவத்தை இழந்துவிட்டு வெளிநாட்டுப் பயணம் செய்வது நல்லதல்ல.

இந்த ஓசிப் பயணத்தை, அந்த நாடுகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கே வழிவகுக்கும்.

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 5



# கனடிய ....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

(Dominic LeBalnc) இந்த வாரம் வோஷிங்டன் டி.சியில் இருக்கிறார். அவர் கனடிய மத்திய அரசின் சார்பில் கனடாவிற்கான ஒரு சிறந்த ஒப்பந்தத்தை மட்டுமே ஏற்றுக் கொள்வார்" என்று கூறினார். வசதி ஏற்பட்டால் இப்பேச்சு வார்த்தைகளின்போது கனடா அமெரிக்காவிற்கு இடையேயான மென்மரக்கட்டைகள் (Softwood Lumber) தொடர்பான நீண்டகால வர்த்தகப் பிரச்சினையைப் பற்றிக் கலந்துரையாடவும் கனடிய மத்திய அரசாங்கம் முயல்கிறது எனவும் பிரதமர் தெரிவித்தார்



Prime Minister Mark Carney met with Canada's premiers in Huntsville.
Thanks: Nathan Denette/The Canadian Press

கனடிய முதல்வர்களுடனான கூட்டத்தில் உரையாற்றிய கனடியப்பிரதமர் மார்க் காணி, "இவ்வாறான முதல்வர்களுக்கு இடையேயான கூட்டம் முதல்வர்கள் வலுவான பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கான வழிகளில் கவனம் செலுத்த ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது. தேசிய நலனுக்கான முக்கிய திட்டங்களை விரைவுப்படுத்த அமைச்சரவைக்கு



Ontario Premier Doug Ford, hosts the premiers at Deerhurst Resort in Huntsville.
Thanks: Nathan Denette / The Canadian Press

அதிகாரம் வழங்கும் சட்டத்தை லிபரல் அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. எதிர் வரும் தொழிலாளர்தின விடுமுறை நாளின் முன்னர் மத்திய அரசு தேசிய நலனுக்கான முக்கிய திட்டங்களை நடைமுறைப் படுத்தும் அலுவலகத்தைத் திறக்க உள்ளது. நீங்கள் முன்னோக்கி நகர்த்த விரும்பும் திட்டங்களின் கருத்துகளைத் தெரிவிக்கவும், எல்லோரிடமும் ஒருமித்த கருத்தைப் பெறவும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். கனடிய முதற்குடி மக்களின் தொடர்ச்சியான ஈடுபாடும் இந்த முயற்சிகளில் முக்கிய பகுதியாகும்" எனத் தெரிவித்திருந்தார்.

மார்க் காணி கனடிய முதல்வர்களைச் சந்திக்கத் திங்கட்கிழமை வருவதற்கு முன்னர் முதற்குடிமக்களின் மூன்று பிரிவுகளான First Nation, Metis மற்றும் Inuit மக்களின் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிவிட்டே வந்தார். கனடியப் பிரதமருடனான சந்திப்பிற்கு முன்னர் டக் ஃபோர்ட் ஊடகவியலாளர் களுக்குத் தெரிவிக்கும்போது, "அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்இனுடைய சுங்கவரி விதிப்பிற்கு இணையாக கனடாவும் அமெரிக்காவிலிருந்து இறக்குமதி



Thanks: Mark Carney's post

செய்யப்படும் பொருட்களுக்கு சுங்கவரி விதித்து அமெரிக்க அதிபருக்கு பதிலடி கொடுக்கவேண்டும். நான் இப்போதும் இவ்வாறு கனடிய மத்திய அரசு செய்ய வேண்டும் எனவே விரும்புகிறேன். அமெரிக்க அதிபர் புரிந்துகொள்ளும் ஒரே ஒரு விடயம் நாம் பலமாக இருந்து கொண்டு பதிலடி கொடுப்பதுதான். நாம் அவர்களுக்கு ஒரு வலுவான செய்தியை அனுப்ப வேண்டும். உலகில் யாருக்கும் நாங்கள் பின்தங்கியிருக்க வேண்டியது இல்லை. அமெரிக்க அதிபருக்கும் இச்செய்தியை அனுப்ப வேண்டும். நாம் அமெரிக்காவிற்கு பின்தங்கியிருக்கவில்லை.

வர்த்தகப் போரால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தொழில்களை ஆதரிக்க கனடிய மத்திய அரசு தயாராக இருக்க வேண்டும். அமெரிக்க சுங்கவரிகளைத் தவிர்க்க அலுமினியப் பொருட்கள் (Cans) தயாரிக்கவும் மற்றும் எஃகு பொருட்கள் (Beams) தயாரிக்கவும் நாங்கள் தொடங்க வேண்டும்" என்று கூறினார்.



Ontario Premier Doug Ford, welcomes the premiers at Deerhurst Resort in Huntsville.
Thanks: Nathan Denette / The Canadian Press.

இரண்டாம் நாள் மாலை டக் ஃபோர்ட் கனடிய முதல்வர்களுக்கும், வர்த்தக மற்றும் சுகாதாரத்துறையைப் பிரதிநிதித் துவப்படுத்தியவர்களுக்கும், முதற்குடி மக்களின் பிரதிநிதிகளுக்கும் ஒரு விருந்துபசார விழாவை நடத்தினார். அதில் ஒன்ராறியோ மாகாணத்திற்குரிய பிரித்தானிய அரசின் பிரநிநிதியான Edith Dumont வரவேற்புரை வழங்கினார்.

மூன்றாம் நாளான புதன்கிழமைக் கூட்டத்தில் பொதுப்பாதுகாப்பு திரும்பத் திரும்ப குற்றம் இழைப்போருக்கான பிணை வழங்குவது தொடர்பாக சீர்திருத்தம் செய்யும் சட்டமூலம் மற்றும் சுகாதார பாதுகாப்பு தொடர்பாகவும் கனடிய முதல்வர்கள் கலந்துரையாடினர்.

டக் ஃபோர்ட், அல்பேட்டா மற்றும் சஸ்கச்சுவான் மாகாண முதல்வர்களுடன் சேர்ந்து ஒன்ராறியோ எஃகு பயன்படுத்தி புதிய குழாய்கள் செய்வதற்கான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அறிவித்தார். இந்த ஒப்பந்தத்தில் ஒன்ராறியோ மாகாணத்தில் கனிமவளங்கள் நிறைந்த நெருப்பு வளையம் (Ring of Fire) என அழைக்கப்படும் பகுதிகளில் உள்ள கனிமவளம் தோண்டப்படும் சுரங்கங்களில் இருந்து மேற்குக் கனடாவிற்கு கனிமங்களை அனுப்ப உதவும் வகையில் புதிய தொடருந்துப் பாதைகளை அமைக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மிகவும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது என்று கூறிய டக் ஃபோர்ட், இது தெற்கு ஒன்ராறியோவில் உள்ள கச்சாய் எண்ணெய் சுத்தகரிப்பு நிலையங்களுக்கும், ஜேம்ஸ் விரிகுடாவில் ஒரு புதிய ஆழ்கடல் துறைமுகத்திற்கும் மேற்குக் கனடாவில் இருந்து கச்சாய் எண்ணெயை அனுப்புவதற்குக் கவனம் செலுத்துகிறது என்றார்.



Thanks: Mark Carney's post

பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் Davind Eby இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பங்கு பெறவில்லை. அவரிடம் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தின் வடக்கு கடற்கரைக்கு அல்பேட்டா மாகாணத்தில் இருந்து எண்ணெய் எடுத்துச் செல்ல



Thanks: Mark Carney's post

எண்ணெய்க் குழாய்களை அமைக்க ஆதரவளிக்கத் தயாராக இருக்கிறாரா என ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்டது. பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண அரசு இத்திட்டத்திற்கு கடந்த காலங்களில் எதிர்ப்புத் தெரிவித்தே வந்துள்ளது.

இக்கேள்விக்குப் பதிலளித்த பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர், "எனக்குத் தெரிந்தவரையில் அல்பேட்டா மாகாணத் திடம் இவ்வாறான ஒரு திட்டம் இல்லை, இவ்வாறான ஒரு திட்டத்திற்கு எந்தத் தனியார் துறையும் முதலிட முன்வந்ததாகவும் தெரியாது. முதலில் அல்பேட்டா மாகாணம் இவ்வாறான ஒரு திட்டத்தின் செயல்முறை வடிவத்தைத் தயாரித்து அதற்கு முதலீட்டாளர்களையும் ஏற்படுத்திய பின்னர் செயல்படுத்த முனையும்போது ஏதேனும் முட்டுக்கட்டை ஏற்பட்டால் நாங்கள் பேச்சுவார்தை நடத்தத் தயாராக உள்ளோம்" என்றார்.

கனடிய முதல்வர்களுக்கான கூட்டமைப்பு ஆலோசனை சபை மாநாட்டின் இறுதியில்



Thanks: Mark Carney's post

பேசிய டக் ஃபோர்ட், "கனடா அமெரிக்காவுடன் ஒரு நல்ல ஒப்பந்தத்தை மேற் கொள்ளும் என்று நான் நம்புகிறேன். கனடாவிற்கும், ஒவ்வொரு மாகாணத் திற்கும், பிரதேசத்திற்கும் நியாயமான மற்றும் சுதந்திரமான வர்த்தக ஒப்பந்தம் இருப்பதை உறுதி செய்வதற்கு நாங்கள் கனடியப் பிரதமருக்குப் பின்னால் நிற்கிறோம். இது நடக்கும் என நான் மிகவும் நம்பிக்கையுடன் இருக்கிறேன்." என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அரசாங்கங்களை விரைவாக செயல்படு மாறு கனடியர்கள் வற்புறுத்துகின்றனர். மிகப்பெரிய பிரச்சினை என்ன என்று உங்களுக்குத் தெரியுமா? அரசாங்கத்தில் ஒரு விடயத்தை முன்னோக்கி நகர்த்துவதில் ஏற்படும் தடங்கலே மிகவும் முக்கியமான பிரச்சினையாகும். இப்பிரச்சினை மக்களால் ஏற்பட்டது அல்ல, தனியார் துறையால் ஏற்பட்டது அல்ல. முதற்குடி மக்களால் ஏற்பட்டது அல்ல, தொழிற்சங்கங்களால் ஏற்பட்டது



Deerhurst Resort in Huntsville, Ontario
Thanks: Wikipedi

அல்ல, இவை எதுவாலும் இப்பிரச்சினை ஏற்படவில்லை. இப்பிரச்சினைகள் அரசாங்கங்களில் கடந்த பல தசாப்தங் களாக இருந்துவரும் ஒழுங்கு முறைகள் (Regulations) மற்றும் அதிகாரத்துவம் (bureaucracy) ஆகியவற்றால் ஏற்பட்டவையாகும்" என்றார்.

மாகாணங்களுக்கு இடையே கையொப்பம் இடப்பட்டுள்ள பல வர்த்தக உடன்படிக்கைகள் பற்றி கருத்துத் தெரிவித்த கனடியப்பிரதமர் மார்க் காணி, "மாகாணங்களுக்கிடையே கையெழுத்திடப் பட்ட தொடர்ச்சியான சுதந்திர வர்த்த ஒப்பந்தங்களை நான் பாராட்ட விரும்பு கிறேன். மேலும் இவ்வாறான ஒப்பந்தங்கள் நடக்கவிருப்பதையும் நான் அறிவேன். இந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் நாட்டிற்கு முக்கியமானவை. நமது குடிமக்கள் விரும்புவதும் இதைத்தான். கனடியர் கனடாவில் தாம் விரும்பும் இடத்தில் வேலை செய்யவும், அவர்கள் விரும்புவதை வாங்க முடியும் என்ற நிலைக்கு அவர்களை விட்டுவிட்டு அரசாங்கங்கள் விலகிச் செல்ல வேண்டும்" என்றார்.

Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 6



# வழிக்கு கொண்டு வரப்பட வேண்டிய தமிழரசு

## – முகிலன் –

வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின், 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும் வாய்ப்புகள் தென்படுகின்றன. ஆனால், இந்தத் தீர்மானங்கள், தமிழ் மக்களுக்கு, குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சாதகமானவையாக இருக்குமா என்ற சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன.

ஏனென்றால், அண்மையில் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த, ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விவகாரத்தில், நீதி வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி இருந்தார். ஆனால், அவரது கருத்தில் சர்வதேச விசாரணைப் பொறிமுறைகள் பற்றிய எந்தக் குறிப்பும் இடம்பெற்றிருக்கவில்லை.

நம்பகமான ஒரு விசாரணைப் பொறிமுறையை அரசாங்கம் உருவாக்க வேண்டும் என, பகிரங்கமாக வலியுறுத்தியிருந்தார்.

ஏற்கனவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச தலையீடுகளையும், பொறிமுறைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது என கூறியிருப்பதுடன் உள்ளகப் பொறிமுறையின் ஊடாக பொறுப்புக்கூறல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாகக் கூறி வருகிறது.

ஆனால் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்து பத்து மாதங்கள் நிறைவடைந்துள்ள போதும், பொறுப்புக்கூறல் விடயங்கள் சார்ந்த எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை.

இது அரசாங்கத்தின் செயற்பாடுகள்மீது நம்பகமான சூழலை உருவாக்கவில்லை. பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அரசாங்கத்தின்மீது நம்பிக்கை கொள்ளா விட்டாலும், இலங்கை அரசாங்கத்தின்மீது பொறுப்புக்கூறலை ஒப்படைக்கும் நோக்கத்துடன் ஐ.நாவும் மேற்குலகமும் செயற்படுகின்றனவா என்ற கேள்வியை எழுப்ப வைத்திருக்கிறது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்காவின் நிதி உதவிகள் வெட்டப்பட்ட பின்னர், அது தனது செயல் திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரத்தையும் தன் தலையில் வைத்துக் கொள்வதற்கு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் விரும்பவில்லையா என்ற சந்தேகங்களும் தோன்றியிருக்கின்றன. இவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கும்.



அவ்வாறான நிலை ஏற்படும் என்பது இன்னமும் நிச்சயமில்லை. ஆனால் அதற்கான வாய்ப்புகள் இருப்பதை மறுப்பதற்கில்லை.

இந்தச் சூழலில்தான், தமிழர் தரப்பு தமது பக்கத்தில் நியாயங்களையும் நீதிக்கான குரலையும் இன்னமும் ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும் என்ற கருத்து ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் யாழ்ப்பாணப் பயணத்தின்போது முன்னெடுக்கப்பட்ட அணையா விளக்கு போராட்டம் ஓர் எழுச்சி நிலையை ஏற்படுத்தியது.

சிறிது காலம் கீழ்நோக்கி சரிந்து கொண்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரத்தை, அணையா விளக்கு போராட்டமும் செம்மணிப் புதைகுழி அகழ்வும் புதிய உத்வேகத்துடன் முன்னெடுக்கப்படுவதற்கான சூழலை ஏற்படுத்தியிருக்கின்றன.

இது ஜெனிவாவின் கதவுகளை தட்டுவதற்குச் சாதகமான நிலை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டு விட்ட விடயங்களைத்தான், ஜெனிவா நடைமுறைப்படுத்தப் போகிறது என்றால் அதன் முடிவுகளில் தாக்கம் செலுத்த முடியாது.

எவ்வாறாயினும் இப்போதைய நிலையில் தமிழர் தரப்பு ஒரே குரலில் தமது நிலைப்பாட்டை - கோரிக்கையை அபிலாசையை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆனால் அப்படியான வாய்ப்பை தமிழர் தரப்பு ஒருமித்த நிலையில் வெளிப்படுத்தவில்லை.

செம்மணிப் புதைகுழிகள் தொடர்பான விசாரணைகளை, சர்வதேச நிபுணர்களின் உதவியுடன் முன்னெடுக்க வேண்டும் என தமிழரசு கட்சியின் சார்பில் ஒரு கடிதம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அந்தக் கடிதம் உள்ளகப் பொறிமுறையை வலியுறுத்துவதாக, அதனை ஏற்றுக் கொள்ளும் வகையில் உள்ளதாக விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு எழுதப்பட்ட அந்தக் கடிதத்திற்குப் பதில் ஏதும் கிடைத்ததா என்ற தகவல்கூடக் கிடையாது. அவ்வாறு கிடைத்திருந்தால் அதனை தமிழரசுக் கட்சி வெளிப்படுத்தியிருக்கும்.

இந்தக் கடிதத்தின் மூலமாக 2021ஆம் ஆண்டு பொறுப்புகூறல் பொறிமுறைகள் தொடர்பாக அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் ஒன்று இணைந்து கையெழுத்திட்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கும் உறுப்பு நாடுகளுக்கும் அனுப்பி வைத்த கடிதத்தில் இடம்பெற்ற விடயங்களுக்கு மாறானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கிறார்.

அதனால் அவர் எல்லா தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து, இவ்விடயத்தில் ஐ.நாவுக்கும் உறுப்பு நாடுகளுக்கும் மற்றொரு கடிதம் அனுப்புகின்ற முயற்சியில் இறங்கியிருக்கிறார். இது தொடர்பாக ஆராயும் கூட்டம் ஒன்று, அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

அந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கொண்டிருந்தார். அவரது சார்பில் அவரது கட்சியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் வீடு தேடிச் சென்று கையளித்திருந்தார்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் சார்பில் யாரும் அந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவில்லை. தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் சில வாரங்களாக நாட்டில் இல்லை. அவர் வெளிநாடுகளில் தங்கியிருக்கிறார்.

அவருடன் ஆலோசித்த பின்னரே சி.வி.கே. சிவஞானம் அக்கூட்டத்தில் பங்கேற்பதை தவிர்த்துக்கொண்டு இருக்கிறார்.

தமிழரசுக் கட்சி ஏன் அந்தக் கலந்துரையாடலில் பங்கேற்கவில்லை என்பதை வெளிப்படுத்தவில்லை.தமிழரசுக்கட்சியைப் பொறுத்தவரையில் பிறகட்சிகளைப் பொருட்டாக மதிக்கவில்லை. அந்தக் கட்சி தேர்தல்களில் தனக்கு மாத்திரமே மக்கள் ஆணை வழங்கியிருப்பதாகக் கூறிக் கொள்கிறது.

மக்களின் அந்த ஆணையை வைத்துத் தவறாகப் பயன்படுத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒருமித்து வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் சூழலையும் தட்டிக் கழித்து, இல்லாமல் செய்கிறது.

விடுதலைப்புலிகளுக்குப் பின்னரான காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இரா. சம்பந்தன், தான் நினைத்தவாறு கையாண்டார். அவரது பல முடிவுகள் தவறானவையாக இருந்தன.

ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரித்தமை, நல்லாட்சி அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்தமை என்று பல தவறுகளைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

அவை எல்லாமே சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் இணைந்து எடுத்த முடிவுகள். அதற்குப் பங்காளிக் கட்சிகளும் ஒத்துழைத்திருந்தன. இப்போதும்கூட தமிழரசுக் கட்சி அதே நிலைப்பாட்டில் தான் செயற்படுகிறது.

பிறகட்சிகள் தரப்புகளுடன் இணைந்து செயல்படாமல் பொதுநோக்கில் செயற்படாமல் அது தன்னிச்சைப்படி செயற்படுகிறது. இந்த நிலைதான் இன்றுள்ள சிக்கல்.

தமிழர் தரப்பு ஜெனிவாவை நோக்கி வலுவான கோரிக்கையை முன்வைக்க வேண்டிய தருணத்தில் பிளவுபட்டு நிற்பது தான் அவலம்.

தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடுகள்தான் இத்தகைய நிலைக்குக் காரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

அந்தக் கட்சி தானாக வழிக்கு வர வேண்டும் அல்லது வழிக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

இது நடக்காமல் போனால் எதிர்காலத்தில், இதனை விடவும் தமிழருக்கு பாதகமான தீர்மானங்களும் முடிவுகளும் எடுக்கப்படுகின்ற போதும்கூட, அந்தக் கட்சி மௌனமாகத்தான் இருக்கும்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough




யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# நல்வாழ்வு பயிற்சி என்றால் என்ன? – பகுதி 8

உஷா மதிவாணன்
M. A (Social Work)
அலைபேசி: 647.808.2904

## Life Coaching

நல்வாழ்வு பயிற்சி எட்டாவது பகுதியினை சில ஜென் கதைகளுடன் ஆரம்பிக்கிறேன்

ஒரு நாள், ஒரு பண்டிதர் (பலருக்கு புத்திமதி கூறுவதில் பெயர் பெற்றவர்) ஒரு ஜென் குருவை சந்திக்கச் சென்றார். குருவிடம் பல பாடங்களைக் கற்றுக் கொள்வதே இந்த சந்திப்பின் நோக்கம் ஆகும். குருவைக் கண்டு வணங்கி அவர் சொல்லத் தொடங்கினார்.

"நான் பல நூல்கள் படித்திருக்கிறேன், பல வழிகாட்டல்களை அனுபவித்து இருக்கிறேன்;" என ஆரம்பித்தார், பிறகு நிறுத்தாமல் மேலும் தனது அறிவின் விஸ்தாரத்தையும் அனுபவத்தின் ஆழத்தையும் கூறிக் கொண்டே செல்லலானார்.

குரு, பண்டிதர் தனது பேச்சை ஆரம்பித்த உடனேயே தேநீரைக் கிண்ணத்தில் ஊற்ற ஆரம்பித்தார். பின் தொடர்ந்து ஊற்றிக் கொண்டே இருந்தார்.

தேநீர் கிண்ணத்திற்குப் புறம்பாக வெளியே கசிய ஆரம்பித்தது.

பண்டிதர்: "ஐயா! இது போதுமானது - கிண்ணம் நிறைந்து விட்டது!"

குரு: "அதேபோலவே, உங்கள் மனமும், அறிவும் நிறைந்துவிட்டது. புதிய அறிவு அடைய, முதலில் பழையதை விட்டுவிட வேண்டும்."

இக்கதைமூலம் நல்வாழ்வுப் பயிற்சி பெற்றுத்தரும் பாடம் என்னவென்றால் இப்பயிற்சி என்பது 'புதிதாக ஒன்று சொல்லுவது' அல்ல. மனதைத் திறந்து வைக்க உதவுவதுதான்.

உங்கள் எண்ணங்களை நீங்கள் திறந்த மனதுடன் கேட்கும் ஆற்றல்தான் முதன்மையான பாடம்.

பயிற்சியாளர் உங்கள் 'தேநீர் கிண்ணம்' நிரம்பியிருப்பதை உங்களுக்கு முதலில் புரிய வைக்கிறார்.

இரண்டாவது கதையில் ஒரு மூத்த ஜென் குரு மற்றும் அவரது சீடர் இருவரும் ஒரு புனித யாத்திரை செய்கின்றனர். அக் காலத்தில் நடந்துதான் எந்தப் புனித ஸ்தலத்தையும் அடைய முடியும். அவ்வாறு அவர்கள் நடந்து செல்லும் போது ஒரு நதிக்கரையை அடைகின்றனர். அங்கிருந்த ஒரு பெண், "தயவுசெய்து இந்நதியைக் கடந்து செல்ல உதவுங்கள்" என்று இவர்களிடம் உதவி கேட்டாள்.

மூத்த குரு, தயங்காமல், அந்தப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு நதியைக் கடந்து அவளை அக்கரையில் இறக்கி விட்டார். மேற்கொண்டு அவரும் சீடனும் தங்களுடைய யாத்திரையைத் தொடர்ந்தனர்.

அவர்கள் இரண்டு மணிநேரம் நடந்தபின் சீடன் சொன்னான்:

"ஐயா, துறவி ஆகிய நீங்கள் ஒரு பெண்ணைத் தொட்டீர்கள், அது தவறல்லவா?"

அதற்கு குரு சிரித்துக்கொண்டே இவ்வாறு பதிலளித்தார் "நான் அந்தப் பெண்ணை நதிக்கரையிலேயே இறக்கிவிட்டு விட்டேன். ஆனால் நீ இன்னும் தூக்கிச் சுமந்து கொண்டே வருகிறாயே!"

இக்கதைமூலம் நல்வாழ்வு பயிற்சி கற்று தரும் பாடம் உங்களுக்கு எளிதாக புரியக் கூடும்.

பழைய அனுபவங்களையும் நம்பிக்கை களையும் நாம் விட்டு விடாமல் தூக்கிக் கொண்டு செல்லும்போது அவை நமது மனதை அவற்றின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டிருக்கின்றன.

பயிற்சியாளர் உங்களின் 'அந்தப் பெண்ணை' ஆற்றின் கரையிலேயே விட்டு விட்டு உங்களது வாழ்க்கையை மேற் கொண்டு தொடர்வதற்கு உதவுகிறார். அதாவது பழைய குற்றச்சாட்டுகள், வருத்தங்கள், பயங்கள் போன்ற அனைத் தையும் உங்களைப் பார்க்க வைத்து அவற்றைக் கடந்து செல்வதற்கான வழி முறைகளை பயிற்சியாளர் உங்களுக்கு எடுத்துக்காட்டுகிறார்.

மூன்றாவது கதையின் மூலமாக எது உண்மை என்பதைக் கண்டறிந்து அதை ஏற்கும் அறிவினையும் பயிற்சியாளர் வாடிக்கையாளருக்கு கற்பிக்க முனைகிறார்.

ஒரு மாணவன் ஜென் குருவிடம் வந்து, "ஏன் என்னைப் பற்றிய வதந்திகளை எல்லோரும் பரப்புகின்றனர்? என்னைக் குறித்து என்னை அறிந்தவர்களே ஏன் புறம் பேசிக்கொண்டே இருக்கின்றனர்? எனக் கேட்டான்.

குரு அவனுக்கு ஒரு கண்ணாடியைக் காட்டினார்.

"நீ இக்கண்ணாடியில் என்னைப் பார்க்கிறாய்? கண்ணாடியில் உன் உருவம்தான் தெரிகிறது.

அதேபோலவே, மற்றவர்களின் விமர்சனங் களில் உன் உள்ளுணர்வைத்தான் அல்லது நீ உன் மேல் கொண்டிருக்கும் மதிப்பின் அளவைத்தான் நீ பார்க்கிறாய்."

மனிதர் பெரும்பாலும் மற்றவர்களின் பார்வைமூலம் தங்களை வரையறுத்துக் கொள்கின்றனர்.

நல்வாழ்வுப் பயிற்சியாளர் உங்களுக்குள் உள்ள உண்மை முகத்தை நீங்கள் பார்க்க உதவுவார்.

தவறான ஒப்பீடுகள், தவறான விமர்சனங் கள் ஆகியவை உங்களைக் கட்டுப்படுத் தக்கூடாது என்பதை உணரச் செய்வது தான் நல்வாழ்வு பயிற்சியின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும்.

நான்காவது கதை நாம் எவ்வாறு நமது உணர்வுகளின் அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதையும் இந்தத் தீய பழக்கத்திலிருந்து விடுபடுவதற்கு எவ்வாறு நல்வாழ்வுப் பயிற்சி உதவுகிறது என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

ஒரு மாணவன் மிகவும் முன்கோபியாகவே இருக்கிறான். எந்த ஒரு சிறு காரணத்திற்கும் பெரும் கோபம் கொண்டு விடுகிறான். அவனது குணம் அவனுக்கே புரிந்தாலும் அவனால் தன்னை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

தனது ஜென் குருவிடம் தனக்கு உதவு மாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறான். குருவும் அவனிடம் "ஒரு காகிதத்தில் 'நான் கோபம் இல்லை' என்று எழுதி வைத்துக்கொள். ஒவ்வொரு நாளும் குறைந்தது ஐந்து முறையாவது அக் காகிதத்தை எடுத்துப் படித்து வா. ஒரு மாதம் கழித்து வந்து என்ன நடந்தது என்பதை என்னிடம் கூறு" என்று அனுப்பி வைத்தார்.

மாணவன் இதை தினமும் செய்தான். ஒரு மாதத்தில்,

'நான் தான் கோபமா?' என்ற சந்தேகம் தோன்றியது. நிதானமாக சிந்தித்துப் பார்த்ததில் கோபம் என்பது ஓர் உணர்வு நிலை மட்டுமே நான் கோபத்தில் நிலைத்து இருக்கிறேன் என்பது உண்மை அல்ல என்பது அவனுக்கு நன்றாக புரிந்தது. குருவுக்கு நன்றி கூறினான்.

நல்வாழ்வுப் பயிற்சியாளர் நமது உணர்வு கள்தான் எனது நிரந்தர குணம் என்ற நமது அழுத்தமான நம்பிக்கையை கேள்வி கேட்க வைக்கிறார். நம் உணர்வுகள் நமது தனிப்பட்ட உரிமை அல்ல. அவை நம் வாழ்வில் பல சிக்கல்களை உருவாக் கும் ஒரு வலை என்பதை புரிய வைக்கி றார். இப்பாடம் கற்றுத்தரும் உண்மை நமது வாழ்க்கையை முற்றாக மாற்றிவிடும் வல்லமை உடையது நண்பர்களே!

மீண்டும் சந்திப்போம்!




நகரத்திற்காக திட்டமிடுவது சிக்கலானதாக இருக்கலாம்



வீட்டுவசதி மற்றும் அதன் வளர்ச்சி பற்றிய உங்கள் கேள்விகளுக்கு விடை காணுங்கள்

mississauga.ca/city-planning-guide

MISSISSAUGA

# நாமும் நமது இல்லமும் 682

## 1993ஆம் ஆண்டிற்குப் பின்னர் அடுக்குமனையின் வியாபாரத்தில் வீழ்ச்சி



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

புதிதாக நிர்மாணம் செய்யப்படும் அடுக்கு மனை மாடிக்கட்டிடங்களில் உள்ள மனை களின் வியாபாரத்தின் வீழ்ச்சி கடந்த மூன்று (3) தசாப்தங்களில் 2025ஆம் ஆண்டின் இரண்டாவது கால்பகுதி மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. அதுமட்டு மல்லாமல் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு இப்பொழுது கையளிக்கப் படும் அடுக்குமனைகளின் இன்றைய பெறுமதி 10%இல் இருந்து 30%வரை குறைவாகக் கணக்கிடப்படுன்றது (Appraisal Value).

அடமானம் பெறுவதில் ஏற்படும் நெருக்கடியுடன், குறைந்தளவிலான பெறுமதியினால் கொள்வனவு செய்தவர்களை மிகவும் மன உளைச்சல்களிற்குக் கொண்டு செல்கின்றது.

இதனால், அநேகமான ஆதனங்கள் கையளிக்கப்படும் திகதிகள் மாதக் கணக்கில் பின்நோக்கிச் செல்கின்றது. இதற்கான ஆதனம் கொள்வனவு செய்தவர்கள் மேலதிகமாகத் தண்டப் பணம் (panalty) நிறுவனங்களிற்குச் செலுத்த வேண்டியுள்ளது.

இந்த வருடத்தில் (2025) இரண்டாவது கால்பகுதியில் (Q2 - 2025), அதாவது ஜூன் 30, 2025இல் நிறைவடைந்த காலப் பகுதியில் 502 மனைகளே ரொறொன்ரோ மற்றும் ஹமில்ரன் (Hamilton) பகுதியில் விற்கப்பட்டுள்ளன.

இந்த எண்ணிக்கை முதலாவது கால்பகுதி யுடன் ஒப்பிடும்போது 10% குறைவானது. அத்துடன் 1993ஆம் ஆண்டிற்குப் பிற்பாடாக நடந்த விற்பனையில் குறைந்த காலாண்டுப் பகுதி வியாபாரமாகும்.

இதனால் பல புதிய நிர்மாணக் கட்டிடங்களின் மனைத் தொகுதிகள் முற்றாக நிறுத்தப்படுகின்றன.




இந்நிலையினால் ரொறொன்ரோ, ஹமில்ரன் பகுதியில் கடந்த ஒன்றரை வருடங்களில் 21 புதிய கட்டிடத் தொகுதி களின் நிர்மாணம் நிறுத்தப்பட்டுள்ளன. இவை மொத்தமாக 4,412 மனைகளாகும். அத்துடன் இவையே 2018ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு அதிகமாக இரத்து செய்யப்பட்ட மனைகளாகும். மேலும் கடந்த மூன்று மாதங்களில் நான்கு (4) கட்டிடத் தொகுதிகளின் நிர்மாணம் நிறுத்தப்பட்டுள்ளன. ஆதன வியாபாரம் 2022ஆம் ஆண்டின் இரண்டாவது காலப் பகுதியிலிருந்து (இறக்க நிலை தொடங்கிய காலம்) அதிகமான கட்டிடத் தொகுதிகள் நிறுத்தப்படுகின்றன அல்லது பிற்போடப்படுகின்றன.

கடந்த காலங்களில் ஒரு கட்டிடத் தொகுதியில் 70%ஆனவை முதலீட்டாளர் களாலேயே கொள்வனவு செய்யப்பட்டன. ஆனால், இன்றைய காலத்தில் முதலீட்டாளர்கள் முற்றாக ஆதன முதலீட்டிலிருந்து விலகி விட்டனர்.

இன்னுமொரு முக்கிய புள்ளி விபரம், Q2இல் கையளிக்கப்பட இருக்கும் மனை களின் சராசரி சதுர அடி விலை $1187. ஆனால் புதிதாக நிர்மாணம் செய்யப் பட்டு, கட்டி முடித்துக் கையளிக்கப்பட்ட மனைகளின் சராசரி சதுரஅடி விலை $903 ஆகும். இரண்டிற்கும் இடையே யான விலை வித்தியாசம் 24% ஆகும்.

இந்த நிலைமையினால் புதிதாக வாங்கப் பட்ட பல மனைகளை வாங்கியோர் கைவிட்டுச் செல்கின்றனர்.

இருந்தும், தமது எதிர்கால நிலைமையை எதிர்பார்த்துப் பலர் அடுக்குமனையை கையேற்கின்றனர். (Completing the Sale).

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்டுப் பெறப்பட்ட உரிமையாளர்கள் தகுந்த வாடகையாளர்களைப் பெற முடியாமலும் தத்தளிக்கின்றனர்.

அத்துடன் மேலதிக மாதாந்தக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய துர்பாக்கிய நிலையிலும் உள்ளனர். இதனால் ஆதன முதலீட்டைப் பலர் தவிர்க்கின்றனர்.

ஆதன வியாபாரத்தின் முடக்கத்தால், கனடிய நிர்மாண முன்னணி நிறுவனங்கள் கூட பலரை தொழிலிலிருந்து நீக்குகின்ற னர்.அநேகமான பொருளாதார ஆய்வாளர் களின் அறிக்கைகளின்படி இந்த வருடம், அடுத்த வருடத்தின் பெரும்பகுதியில் ஆதன வியாபாரம் இயல்பு நிலையை அடையாது என்றே தெரியவருகிறது.

இன்றைய காலகட்டத்திலும் 17,117 அடுக்குமனைகள் கட்டப்படுகின்றன.

எதிர்வரும் ஆறு (6) மாதங்களில் ரொறொன்ரோ மற்றும் ஹமில்ரன் பகுதி களில் 31,422 மனைகள் கட்டி முடிக்கப் பட்டு கையளிக்கப்பட இருக்கின்றன. இதில் பெரும்பகுதி வியாபார நோக்கமாக வாங்கியவர்களே (Investors). இவை வாடகைக்கு, சந்தைக்கு வர உள்ளன.

சில நிர்மாண நிறுவனங்கள் தமது அடுக்குமனைத் தொகுதியை வாடகைக்கு விடக்கூடிய மாதிரி மாற்றுகின்றன (Rental Building). இதனாலும் மேலதிக அலகுகள் வாடகையை நோக்கியுள்ளன. எனினும், கடந்த மூன்று வருடங்களிலும் (2022, 2023, 2024) மற்றும் இந்த வருடமும் ஆதன வியாபார இறக்கத்தால் ஆதன நிர்மாணம் குறைந்தே வருகின்றது. இன்றைய நிலைமையினால் 2028ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு அடுக்கு மாடி



மனைகளின் எண்ணிக்கை ஆதனச் சந்தையில் மிகக் குறைவாகவே காணப்படும். 2028இற்குப் பிற்பாடு நிச்சயமாக போதிய அடுக்கு மனைகள் சந்தைக்குக் கொண்டு வரமுடியாது. இந் நிலைமையினால் அடுக்குமனையின் விலையும், வாடகை யின் செலவும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம்.

ஜுலை 30, 2025இல் கூடிய கனடிய மத்திய வங்கி, தனது வட்டி வீதத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மூன்றாவது தடவையாக வட்டிவீதம் 2.75%ஆகவே காணப்படுகின்றது. முதன்மை வட்டி வீதம் 4.95% அடுத்த வட்டிவீத அறிவிப்பு செப்ரெம்பர் 17, 2025 ஆகும்.

# ஓர் அதிசயமான பெட்டி

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.timelesstoday.com**
**www.premrawat.com**

நீங்களும் மனிதன் நானும் மனிதன் என்ற அடிப்படையிலேயே இப்பொழுது நான் பேச விரும்புகிறேன். மதத்தின் கண்ணோட் டத்தில் இல்லை. மனித உறவின் அடிப்படையில்தான். ஏனென்றால், மனிதத் தன்மையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. இதுவே நமக்கு இடையில் உள்ள உறவு. நமக்கு இந்த வாழ்க்கை கிடைத்துள்ளது. அதில் மூச்சு வந்து போகிறது. நாம் எல்லோரும் மனிதர் என்பதை நாம் மறந்து விடுகிறோம். எப்போது மனிதன் மற்றொரு மனிதனை மனித நேயத்தின் கண்களால் பார்ப்ப தில்லையோ, வேறு கண்ணாடியால் பார்க்கும்பொழுது, அதாவது மதம் என்ற கண்ணாடி அல்லது அரசியல் என்ற கண்ணாடி வழியாக, பார்க்கும்பொழுது, நிலைமை தெளிவாக ஆவதற்குப் பதிலாக மேலும் கெட்டுவிடுகிறது.

நான் சொல்ல விரும்புவது மிகவும் எளிமையான விடயம்.

ஒரு பெட்டி இருக்கிறது. அதில் ஏதோ வைக்கப்பட்டுள்ளது. அது பூட்டப்பட்டுள் ளது. முதலில் இப்பெட்டி எது?. எந்தப் பெட்டியைப்பற்றி நான் பேசுகிறேன்?

நான் குறிப்பிடும் பெட்டி, இந்த மனித உடல். மனித உடலில் ஏதோ வைக்கப்பட்டுள்ளது.

இது சாதாரண பெட்டி இல்லை. இதற்கு ஒரு நியதி உண்டு. இந்தப் பெட்டி இயற்கையின் நியதிக்குக் கட்டுப்பட்டது. ஒரு நாள், இந்தப் பெட்டி செய்யப்பட்டது. பிறகு ஒரு நாள் இது இருக்காது.

அறியாமைதான் இப்பூட்டு. 'ஞானம்' என்ற சாவி என்னிடம் இருக்கிறது. யாருக்காவது தேவையானால், நான் அதைக் கொடுக்க முடியும்.

நான் சாந்தியைப்பற்றியும் உண்மை மகிழ்ச்சியைப்பற்றியும் பேசுகிறேன். ஒருவனுக்கு ஒன்றுமே செய்ய வரா விட்டாலும், தன் இதயத்தில் அந்த உண்மை ஆனந்தத்தை அனுபவிக்க முடிந்தால், அதுவே பெரிய பாக்கியம்.

மகிழ்ச்சியின் அனுபவம் கிடைத்து, உள்ளத்தில் அமைதியையும் அனுபவித் தால் அதுவே மனிதனுக்கு எல்லாவற்றை யும்விட உயர்ந்த விடயம். இந்த விடயத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்பதும், அந்தக் கொடையாளியின் அருள்தான்.

உலகம் மனிதனின் கவனத்தை வெளிப் பக்கம் இழுக்கிறது. இந்த ஞான வழிமுறை மனிதனின் கவனத்தை வெளியில் இருந்து திருப்பி உட்பக்கம் ஈடுபடுத்து கிறது. அப்பொழுது மனிதனுக்கு எப்பொருளின் அனுபவம் ஏற்படுகிறது? அமைதியின் அனுபவம் ஏற்படுகிறது. ஞானம் அமைதியை உண்டாக்குவ தில்லை. சாந்தி எல்லா மனிதரின் உள்ளேயும் இருக்கிறது. நிதானமாக யோசியுங்கள். சிந்தித்துப் பாருங்கள். ஆனத்தத்தின் களஞ்சியம் உங்களுள்ளே உள்ளது.

Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 9



# இனிவரும் ஒரு தலைமுறைக்கு இவ்விட வாசம் சாத்யமோ? – பாடகர் ரேஷ்மி சதீஷ்

கண்ணன்

‘இனிவரும் ஒரு தலைமுறைக்கு இவ்விட வாசம் சாத்தியமோ’ என்று தொடங்கும் ஒரு நாட்டுப்புறப் பாடல்மூலம் மலையாளிகள் மத்தியில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் தமிழரிடையேயும் ஒருவராகி விட்டார் ரேஷ்மி சதீஷ். எப்படி ஒரு மலையாள நாட்டுப் புறப்பாடல் தமிழரையும் வசீகரித்து பாடச் செய்கிறது என்ற தேடலுடன் ரேஷ்மியைச் சந்தித்தோம். சென்னை வந்த ரேஷ்மியிடம் ஆங்கிலமும் தமிழும் மலையாளமும் கலந்து பேசும் பேச்சில் கம்பீரமும் வசீகரமும் தெறிக்கிறது. இனி ரேஷ்மி சதீஷ்;

**கேள்வி - ‘இனிவரும் ஒரு தலைமுறைக்கு’ பாடலில் இருந்தே தொடங்கலாம்?**

1 Bedroom in Upstairs & 3 Bedrooms in a bsmt for rent. Shared washroom & kitchen. Male only. Close to TTC, Centennial College & grocery shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.837.1860**

## ROOM FOR RENT
**KENNEDY & ELLESMERE**
1 Bedroom for rent in a bsmt. Female only.
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Female only.
தொடர்புகளுக்கு: **647.247.9221**

## BASEMENT/ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
3 Bedrooms & 2 washrooms bsmt for rent. Sep. entrance & 2 Parking. Also 1 Bedroom for rent in upstairs. Ladies only. Close to Costco & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.488.5123**

## HOUSE & BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
4 Bedrooms house, 3 bedrooms house & 2 Bedrooms bsmt for rent. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.662.9935**

## ROOM FOR RENT
**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a 2 bedrooms bsmt. Sep. entrance, No parking. Ladies only. Utility included. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.505.8269**

## BASEMENT/ROOM FOR RENT
**MARKHAM & STEELES**
3 Bedrooms newly renovated bsmt for rent Private room also available. Sep. entrance & parking. No smoking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.712.2692**

## BASEMENT/APARTMENT FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
**MORNINGSIDE & ELLESMERE**
3 Bedrooms apartment for rent. Parking. Avail. immediately.
**416.818.3327/416.818.1542**

## HOUSE & BASEMENT FOR RENT
**SHEPPARD & MEADOWVALE**
2 Bedrooms house & 2 Bedrooms bsmt for rent. Parking, Close to 24 hrs. bus service, University & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.609.4518**

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedrooms for rent in upstairs. Female only. In front of bus stop. Close to all facilities. Avail. September 01, 2025.
**647.231.2637/647.766.7089**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
2 Bedrooms for rent in an apartment. Including utility. Close to all facilities.in front of Woodside mall. Working people preferred. Avail. August 15, 2025.
தொடர்புகளுக்கு: **437.424.0702**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 Large room for rent in an apt. with furniture. 2 person preferred. internet. No smoking & no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.276.6884**

## CONDO. FOR RENT
**KENNEDY & HWY 401**
1 Bedroom new condo. for rent. Working Ladies preferred (Christian). Beside Kennedy commons plaza. 24x7 Security, GYM & Internet. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.405.7632**

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 Room for rent in a 3 bedrooms bsmt. Shared kitchen. Male only. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.825.0566**

## ROOM FOR RENT
**MCCOWAN & DENISON**
Room for rent. All inclusive.
Avail. immediately.
**437.219.3329/647.570.1917**

## ROOM FOR RENT
**MARKHAM & DENISON**
1 Bedroom for rent in a 2 bedrooms Condo.. Female only. Sep. washroom & shared kitchen. Close to bus stop & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.475.1933**

## ROOM FOR RENT
**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance. Close to TTC. Working /student Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & 1 parking. Close to bus stop & all facilities. 2 Working people /Couple preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.891.5157**

## BASEMENT/ROOM FOR RENT
**MARKHAM & SHEPPARD/DENISON**
Single room with sep. washroom for rent. Rent $500. Large bedroom sharing for male. Rent $700
**DON MILLS & STEELES**
2 Bedrooms bsmt for rent $1600 + Utility. No alcohol, no pets & no smoking. Avail.immediately.
**647.507.2148/647.864.1051**

## HOUSE & BASEMENT FOR RENT
1. **SCARBOROUGH -** 4 Bedrooms & 1 washroom house & 2 Bedrooms bsmt for rent.
2. **MARKHAM & STEELES -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.
3. **PICKERING (WHITES & TAUNTON) -** 4 Bedrooms & 3 washrooms house & 1 Bedroom bsmt for rent.
4. **AJAX -** 4 Bedrooms & 3 washrooms house & 2 Bedrooms bsmt for rent.

தொடர்புகளுக்கு: **647.850.7831**

## BASEMENT/ROOM FOR RENT
**9TH LINE & HOOVER PARK -** 2 Bedrooms & 2 washrooms big bsmt for rent. Sep. entrance & 1 parking.
**MARKHAM & STEELES -**1 Bedroom bsmt for rent. Sep. entrance.
**CONLINS & SHEPPARD -** Rooms for rent. Shared kitchen & washroom & 1 parking.Close to U of T. Single room $800, shared room $900. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.3355**

## HOUSE / CONDO. FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedrooms town house for rent. 1 Parking. Close to TTC. Walking distance to U of T & school. Avail. immediately.
**KENNEDY & HWY 401**
2 Bedrooms Condo. for rent. Balcony & 1 Parking
**SAM - 416.837.0927/ 647.573.2205**

Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 16



## HOUSE FOR RENT
**TAUNTON & BROCK**
**PICKERING** - 5 Bedrooms + office room & 3 washrooms house for rent. 5 Parking. Close to bus stop, Shopping mall & Walking Clinic & all facilities. Avail. immediately
தொடர்புகளுக்கு: **647.532.2209**

## HOUSE FOR RENT
**TAUNTON & HWY 412**
**WHITBY** - 4 Bedrooms & 3.5 washroom house for rent. 4 Parking. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.308.7221**

## COMMERCIAL SPACE FOR RENT
**KENNEDY & EGLINTON**
Commercial basement for rent. 1000 Sq. Ft, Rent - $1,500 including all utilities. Suitable for music, dance, any private classes or office space (Tax Firm)
Please call: **416.828.5019**

## CAR FOR SALE
2008 TOYOTA YARIS for sale. Automatic. 228,000 Kilometers. Good condition & A/C.
தொடர்புகளுக்கு: **416.688.8364**

## HOUSE FOR RENT
**MARKHAM & STEELES**
4 Bedrooms & 4 washrooms house for rent. 2 Parking. Suitable for family. Close to bus stop & all facilities. Avail. immediately.
**647.767.0853/ 647.271.8511**

## HOUSE FOR RENT
**KENNEDY & ELLESMERE**
3 Bedrooms main floor for rent. Boys/ Girls preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.899.9199**

## HOUSE/BASEMENT FOR RENT
**MORNINGSIDE & OLD FINCH**
3 +2 Bedrooms full house for rent. Also 1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to Bus stop, School & Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.780.2129**

## HELPER WANTED
**MARKHAM & SHEPPARD** பகுதியில் உள்ள Ideal Stairs making factory (Wood work) ஒன்றிற்கு அனுபவ முள்ள உதவியாளர் ஒருவர் தேவை. ஆண் விரும்பத்தக்கது. வாரத்தில் ஒரு நாளைக்கு Cleaning வேலைக்கும் பெண் ஒருவர் தேவை (Weekend)
தொடர்புகளுக்கு:**416.830.3932**

## HOUSE FOR RENT
**BRIMLEY & FINCH**
3 Bedrooms & 2 full washrooms house for rent. 2 Parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.298.0134**

## HOUSE/BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
4 Bedrooms house for rent.
**STAINES & MORNINGSIDE**
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
**Contact: 647.686.8590**

## OFFICE SPACE FOR RENT
**MARKHAM & FINCH**
Spacious office space available for rent. Suitable for professional offices & class rooms /educational institution.
**416.918.9848/416.857.7603**

## திருமண சேவை
கனடா மற்றும் இலங்கையில் வாழும் பொருத்தமான மணமக்கள் எம்மிடம் உண்டு.
தொடர்புகளுக்கு: **437.849.9619**

## HOUSE FOR RENT
**WARDEN & ELLESMERE**
3 Bedrooms bungalow house for rent. Laundry & parking. Small family/working people preferred. Close to TTC & all facilities. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.770.0178**

## HOUSE FOR RENT
**MCCOWAN & LAWRENCE**
**3** Bedrooms & 1.5 washrooms bangalaw house main floor for rent. 2 Parking. Close to STC, Hospital, bus stop & all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.728.3165**

## JOB VACANCY
**CLEANER**
**LOCATION : NEWMARKET**
(Full time / Part time)
**Requirement -** Minimum 3 years experience.
**Contact- 647.308.7221**

## JOB VACANCY
**STUDENTS RECRUITERS**
**LOCATION : SCARBOROUGH / BRAMPTON** (Full time / Part time)
**Requirement -** University degree (Canada) Institutional experience & Communication skills in English & Tamil
**416.918.9848 /416.857.7603**

## HOUSE FOR RENT
**9TH LINE & 14TH AVENUE**
4 Bedrooms & 3 washrooms house for rent. Rent - $3,200. Close to TTC & all the facilities. Avail. immediately.
**416.918.9848/416.857.7603**

## HOUSE/BASEMENT FOR RENT
**MORNINGSIDE & MCNICOLL**
3 +1 Bedroom house & 1 bedroom walkout bsmt for rent. 2 Parking. Close to TTC, School & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.556.4881**

## முதியோர், குழந்தை பராமரிப்பு
நன்கு படித்த முதியோர் குழந்தைகளை பராமரிப்பதற்குரிய Diploma வைத்திருக்கும் ஆங்கிலம் நன்கு பேசக்கூடிய பெண் ஒருவர் தேவைப்படின் தொடர்புகொள்க.
தொடர்புகளுக்கு:**+94.71.425.5177**
**Whatsapp only**

## V MOVE & DELIVERY
உங்களின் சிறியளவிலான மற்றும் பெரிய அளவிலான உள்ளூர் மற்றும் வெளியூர் **Toronto - Montreal/ OTTAWA moving** தேவைகளுக்கு
அழையுங்கள்.
**416.277.4245**



## HOME RENOVATION


- Home Painting
- Kitchen Counter top
- Kitchen cabinet
- Laminate
- Tile work
- Washroom Vanity
- Hardwood Flooring

உங்கள் நிர்மாண வேலைகள் எதுவாயினும் குறித்த நேரத்தில்
அழையுங்கள் : **Krish - 647.642.7646**

## வீட்டு பராமரிப்பு
வீட்டுவேலையுடன் வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் உதவியாளர் ஒருவர் தேவை. வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும். இடம் : Pickering
தொடர்புகளுக்கு:**647.970.8392**

## WALK IN CLINIC
**DR.U.SOMASUNDARAM**
Family Physician
1200 Markham Road, Unit No.115
Scarborough, ON M1H 2Y9
**T: 416.439.8085**
**Open Hours - Monday - Friday**
**9:00Am - 7:00 Pm**

## TRANSPOTATION SERVICE



**பேருந்து போக்குவரத்து சேவை**
விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி நீண்டதூர, குறுகிய தூர சுற்றுலாப் பயணங்கள் மற்றும் ஏனைய வாகனப் போக்குவரத்து சேவைகளுக்கு
அழையுங்கள்: **416.904.6597**
**416.476.8913**



## KITCHEN HELPER WANTED
**MARKHAM & STEELES** பகுதியிலுள்ள **Take out restaurant** ஒன்றிற்கு **kitchen helper** ஒருவர் தேவை. ஆண்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
**Full time position.**
**Please Contact: 416.321.3456**

## CONSTRUCTION
## RESIDENTIAL & COMMERCIAL

- Design & Build (Permit drawings)
- Basement & Separate Entrance
- Concrete Work
- Doors & Windows
- Entry Doors
- Kitchen & Bath specialist.
- Full Interior & Exterior Renovations
- Quartz Counter Specialist
- Electrical
- Plumbing
- Painting
- Surveillance System (Camera)
- Hardwood Stairs
- Laminate / Hardwood Flooring

**Call or text Laptiva**

**@ 416.799.7945 for quotation**



## வேலைக்கு ஆட்கள் தேவை – FULL TIME / PART TIME

**CHEF, LINE COOK & BREAKFAST COOK**

**QUEEN & LESLIE**இல் அமைந்துள்ள **English Pub** ஒன்றிற்கு **Chef, line Cook & Breakfast cook** போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம்.

**Call: 416.220.9179 Email: chadsenagroup@gmail.com**


## பழமொழியும் அதன் விளக்கமும்....

### பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க!

**விளக்கம்**: வாழ்க்கையில் 16 வகையான செல்வங்களான உடலில் நோயின்மை, நல்ல கல்வி, தீதற்ற செல்வம், நிறைந்த தானியம், ஒப்பற்ற அழகு, அழியாப் புகழ், சிறந்த பெருமை, சீரான இளமை, நுண்ணிய அறிவு, குழந்தைச் செல்வம், நல்ல வலிமை, மனத்தில் துணிவு, நீண்ட வாழ்நாள்(ஆயுள்), எடுத்தக் காரியத்தில் வெற்றி, நல்ல ஊழ் (விதி), மற்றும் இன்ப நுகர்ச்சி பெற்று வளமாக வாழுங்கள் என்று பொருள்.




**Watson Property Management**

We Pro-Manage your Properties!

FREE

FOR CONSULTATION/ SUGGESTIONS!

**416 284 9999**

## WATSON PROPERTY MANAGEMENT

### About Us

With 30 years of experience in real estate, we proudly manage over 100 properties for diverse landlords, including:

- ✔ Foreign property owners
- ✔ Multi-property investors
- ✔ First-time buyers looking to maximize their property Value

We ensure cost-effective and hassle-free property management, handling everything from marketing to maintenance.

### Our Services

- **Effective Marketing** – Maximize property exposure.
- **Property Showings** – Find the right tenants.
- **Tenant Screening** – Secure reliable and responsible renters.
- **Lease Preparation** – Handle all paperwork.
- **Move-in Assistance** – Stress-free key handovers.
- **Rent & Utilities Collection** – Timely payments guaranteed.
- **Regular Inspections** – Regular walkthroughs every 6 months.
- **Affordable Maintenance** – Trustable handymen with cost effective repairs.
- **Market Updates** – Stay informed on property value.
- **Lease Renewals & Rent increase** – Maximize rental income.
- **Financial Reports** – Year-end accounting for tax purposes.
- **Legal Notices & Paralegal Support** – Professional paralegal guidance.
- **Move-out Management** – Key collection and final walkthroughs.



MANAGING OVER 100 PROPERTIES ACROSS VARIOUS CITIES AND TOWNS WITHIN A 2-HOUR RADIUS OF TORONTO.




- AJAX
- BRAMPTON
- BOWMANVILLE
- BEAVERTON
- COURTICE
- ETOBICOKE
- KESWICK
- KINGSTON
- MARKHAM
- VAUGHAN
- STOUFFVILLE
- KITCHENER
- MISSISSAUGA
- NORTH YORK
- OSHAWA
- PICKERING
- SCARBOROUGH
- TORONTO
- TRENTON
- WHITBY
- WATERLOO
- NIAGARA
- NEWCASTLE
- RICHMOND HILL



### We're Expanding & Hiring!

As we CONTINUE TO GROW and serve more areas, we're looking for reliable handymen to join our trusted maintenance NETWORK. If you're a skilled handyman OR know someone who is we'd love to hear from you! WE'D love to work together.

**REACH US @: 416 284 9999**

Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 18



# கந்தவேளைக் கருங்குயிலே வரக்கூ வாயே!



பாதிமதி ஏறுசடைப் பரனார் நெற்றிப்
பரந்தவிழி உகுத்திட்ட ஆறு பொறிகள்
சோதிப்பொலி வுடனாறு மதலை களாகிச்
சுந்தரத்தா யணைக்கவந்த அறுமுக வேலனை!
ஆதிகேசவன் மருகனை! அமரர் தொழவே
அருளொளிவி ரிக்கின்ற வைவேல் முருகனை!
நாதியற்று நலிவுற்றோர் நலந்தனைக் காத்திட
ஞானமுதலைப் பூங்குயிலே வரக்கூ வாயே!

சுந்தரமதி முகமாறும் சோதியோ டாடத்
தூய்மைமிகு பொன்முடிகள் துலங்கி ஆடச்
சந்தணியும் மார்பில்முப் புரிநூ லாடச்
சக்திகளாய்ப் பாவையரும் பக்க மாடப்
பந்தமறுக் கும்வைவேல்செங் கரத்தி லாடப்
பசுந்தோகை தனைவிரித்தே மயிலும் ஆட
வந்தாதரி யென்றடியார் மன்றா டவந்தருள்
வடிவேலனைப் பூங்குயிலே வரக்கூ வாயே!

விந்தையென அருணகிரியின் உயிரைக் காத்து
விலைகாணாப் புகழாரஞ் சூட்ட வைத்து
முந்தைவினை தீர்த்துப்பத மீய்ந்தளித் தானை!
முத்தமிழுக்(கு) அணிசேர்த்தோர்க்(கு) அருள்தந் தானை!
செந்தமிழுக்(கு) ஏங்கிஔவைக் கருளி னானை!
தினைப்புலத்தில் வரித்திட்ட வள்ளி கேள்வனை!
வந்தவதா ரஞ்செய்து சைவமுந் தழைக்க
வழிசெய்யப் பூங்குயிலே வரக்கூ வாயே!
நற்றமிழால் வைதிடினும் நவநிதி அளித்து
நன்னிலைய ளித்தருளும் மாயோன் மருகனை!
பற்றுவைத்துத் தஞ்சமென நம்பு மடியார்
பந்தமறுத் தென்றும்பே ரின்ப மீயப்
பொற்பதம் அளித்தருளும் சற்குரு நாதனை!
பொற்சிகரி வாகனனின் இளவல் தன்னை!
உற்றதுணை யாயிலங்கும் உம்பர் கோனை!
உளம்மகிழ்ந்து பூங்குயிலே வரக்கூ வாயே!

தந்தித்த னித்தொந்தி ஐங்கர முதல்வனின்
சகோதரசண் முககுகனைச் சத்தியின் சத்தியை!
செந்திருவும் கலைமகளும் சேர்ந்தே வாழ்த்தச்
சீர்த்திமலி அறுபடையி லுறையுஞ் சேந்தனை!
கொந்தாரும் கடம்பணிகூர் வேலா யுதனை!
கூற்றுகந்தோன் அருளமுதைக் கும்பிடும் அடியார்
பந்தித்த மும்மலம கற்றிடும் பரனைப்
பசுஞ்சோலைப் பூங்குயிலே வரக்கூ வாயே!

ஆறுபடை வீடமர்ந்து அருள்அறு முகனை!
அரகரசிவ சண்முகனை! அமரர் தொழும்
ஏறுமயில் வாகனனை! எழிலார் குழகனை!
எண்குணங்கொள் பஞ்சாட்சரக் கடவுளை! அன்று
வீறுகொண்டே பொருதிட்ட வீர சுரனை
வென்றுவாகை சூடிநின்ற வைவேற் குமரனை!
நாறுமலர்ச் சோலைமலி குன்றுதோ டாடும்
நாயகனைப் பூங்குயிலே வரக்கூ வாயே!

அந்திவண்ணன் கைகட்டி வாயும் பொத்தி
அடிபணிந்து செவிசாய்க்க ஓங்கா ரமென்னும்
மந்திரத்தின் பொருளுரைத்த குருவா னானை!
மகிழ்ந்தினிய வள்ளிதனை வரித்த கோனை!
முந்தியோர்நாள் அயனவனைச் சிறையிட் டவன்தன்
முனைப்பதனை நீக்கியமுக் கண்ணன் சேயை!
சிந்தையினாற் சந்ததமும் சீர்அடி யரேத்தும்
செவ்வேளைப் பூங்குயிலே வரக்கூ வாயே!

அவியாத செழுஞ்சுடராய் ஒளிர்கின் றானை!
அழகவிள சிவகுமார செல்வன் தன்னை
குவியாத மலரெடுத்துப் பூசை யியற்றிக்
'கொடுமுருகா' என்றெதுவும் கேட்கா தோர்க்கும்
கவியாற்றித் தமிழாலே அர்ச்சிப் போர்க்கும்
கருணைகொண் டருள்பொழியும் கந்த குகனை!
புவியாத ரித்துப்போற் றுங்கலி வரத
போதாந்தனைப் பூங்குயிலே வரக்கூ வாயே!

கலிகாலம் முடியும்வரை உயிர்ப் பலியா?
காசினிக்கு விமோசனந்தான் என்றும் இலையோ?
நலிவுற்றோர் வறுமையினால் துடிப்பதெதற்கோ?
நாளுமவர் முன்செய்த வினையின் விழைவோ?
பலியாகும் பலகோடிக் குழந்தைகள் என்ன
பாவந்தான் செய்தினரோ? பாரா முகமேன்?
கலிவரதன் பஞ்சமிலா உலகாய் மாற்றக்
கடம்பனைநற் கருங்குயிலே வரக்கூ வாயே!

இன்றைய நிலைகண்டு.......
கந்தவேளைக் கருங்குயிலே வரக்கூ வாயே

தவநெறியை மறந்துவாழும் மாந்தரும் உண்டு!
தற்போதம் கொண்டுதலை வீக்கங் கொண்டு
சிவசிந்தனை யிலுமந்தோ சிரத்தை விட்டுத்
திருநீறு அணிவதையும் மறப்பர் உண்டு!
அவதூறு பேசிநிதம் அடுத்தவர் உயர்வை
ஆற்றாது பொறாமைகொண் டுழல்வோ ருமுண்டு!
குவலயத்தில் அறங்காத்து அமைதி காக்கக்
குலாந்தகனைப் பூங்குயிலே வரக்கூ வாயே!

பலங்கொள்வல் லரசுகளின் ஒற்றுமை இன்மை!
பாரெங்கும் மதங்களினால் நேரும்பே ரவலம்!
உலகெங்கும் கொடுஞ்செயல்கள் மலியுங் காட்சி!
ஊழல்களால் சமூகங்கள் அடையுங் கேடு!
நிலஞ்சேர்க்கும் வெறிகொண்டோர் உயிர்கள் அழியும்
நிலைகண்டும் போர்நிறுத்தம் செய்யா நிலைமை!
கலங்கிவாழ் கோடிமக்கள் துயரைக் களையக்
கந்தவேளைக் கருங்குயிலே வரக்கூ வாயே!



பல்வைத்திய கலாநிதி இளமுருகனார் பாரதி

## இனிவரும்...

7ஆம் பக்கத்தொடர்ச்சி

பரிசோதனை செய்ய வேண்டும். நான் அதை விரும்புபவள். அதை விரும்பாத வர்கள் இருக்கின்றனர். அது இசையாக இருந்தாலும் சரி, எழுதுவதாக இருந்தா லும் சரி, வரைவதாக இருந்தாலும் சரி, எல்லாம் மாறவில்லையா? நீங்கள் புதிதாக ஏதாவது செய்யும்போது விமர்சிக்கக் கூடாது என்று அர்த்தமல்ல. அது தவறு என்று வாதிடாதீர்கள். அதை பல்வேறு வகையான பரிசோதனையாக எடுத்துக் கொள்ளுங்கள். எனக்கு ஏதாவது பிடிக்க வில்லை என்று சொல்வது தனிப்பட்ட சுதந்திரம். ஆனால், யாரும் அதை விரும்பக்கூடாது என்று நீங்கள் சொல்லக் கூடாது. பழைய மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களை நாம் படிக்க முடியாது. நாம் மீண்டும் எழுதப்பட்ட பதிப்புகளை மட்டுமே பெறுகிறோம். அது அறிவாக இருந்தாலும் சரி, கலையாக இருந்தாலும் சரி, அது அப்படித்தான் மாற்றப்படுகிறது. ஆன்மாவை இழக்காமல் ஒரு புதிய விளக்கம். நாம் ரசிக்கும் முறை மாறிவிட்டது.

**கேள்வி - கலை என்பது குறித்து;**

**பதில் -** கலை என்பது ஒரு பொறுப்பு. நீண்ட காலமாக இசையை இப்படிப் பயன்படுத்த முடியும் என்று எனக்குத் தெரியாது. அறிவியல் பயிற்சி மற்றும் செயல்திறன் மட்டுமே இருந்தது. சமூக மயமாக்கல், பயணம் மற்றும் நண்பர்கள் மூலம் நாம் பல வழிகளில் மாறி வருகிறோம். நான் சமூக தொடர்புகளை



வைத்திருக்க விரும்பினேன். நான் பொது மக்களிடையே இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை எப்படியோ எனக்கு இருந்தது. மீதமுள்ளவற்றை நாங்கள் மீண்டும் உயிர்ப்பித்துள்ளோம். இசைக்கு ஒரு சக்தி உண்டு. அதற்கு எளிதாகத் தொடர்பு கொள்ளும் வசதி உள்ளது. நீங்கள் பாட விரும்பினால், நீங்கள் அதை எளிதாகச் செய்யலாம். நமது பாடல் மற்றவர்களைத் தொடும்போது, அது நம்மை மீண்டும் மீண்டும் ஊக்குவிக்கும்.

**கேள்வி - கனவுகள்?**

**பதில் -** வாழ்க்கையில் நான் பெரிய ஆசைகள் உள்ளவள் இல்லை. பாடல்கள் பாடணும், பயணம் பண்ணணும், சாப்பாடு சாப்பிடணும். இந்த மூன்றையும் தொடர்பு படுத்தி அப்படியே போகணும். வேற எதையும் பத்தி நான் யோசிக்கல. நடக்குற எல்லா இசை விழாக்களிலும் கலந்துக் கணும். நிறைய இடங்கள் இருக்கு. எவ்வளவு பயணம் பண்ணாலும் இன்னும் கொஞ்சம் மிச்சம் இருக்கு.

குழந்தைகளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற ஆசை எனக்கு இருக்கிறது. எந்த ஒரு குறிப்பிட்ட பகுதி யிலும் அவர்களைத் தடுக்காமல் அவர்களைத் திறக்க வேண்டும். கேட்கவும் பார்க்கவும் பல விடயங்கள் உள்ளன. பல சாத்தியக்கூறுகள் உள்ளன. அதிலிருந்து அவர்கள் தேர்வு செய்யட்டும். எதில் இருந்தும் அவர்களைத் தடுக்காதீர்கள். குழந்தைகள் மாற்றங்களைக் கொண்டு வரட்டும். சில நேரங்களில் அப்பா அம்மா கூட அவர்களின் ஆர்வத்தைத் திருப்திப் படுத்த முடியாது. ஆசிரியர்கள்கூட அவர் களிடம் பல விடயங்களைச் சொல்லத் தயங்குவர். குழந்தைகள் வித்தியாசமான வர்கள். ஆசிரியர்கள் அவர்களின் சொந்த சிறப்பு அம்சங்களுடன் அவர்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் பரஸ்பர அன்பும் பாசமும் இருக்கும். அதைப் புரிந்துகொண்டால், அது நம்ப முடியாத அளவிற்கு மென்மை



யானது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் பாகுபாடு காட்ட வேண்டிய அவசியமில்லை. நான் என் நண்பர்களை ஆணாகவோ பெண்ணாகவோகூடப் பார்ப்பதில்லை. நான் அவர்களை ஒரு மனிதனின் பார்வையில் பார்க்கிறேன். இசைமூலம் எதையும் நாம் கையாள முடியும். அதுதான் ஒரே நம்பிக்கை.

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier
(Teacher)
Contact: 647.340 .9490 / 416.732.2228



மன்னிப்புக் கேட்கும் எவருக்கும், மன்னிப்பை மறுக்காதீர்.
மன்னிப்புக் கேட்காதோரையும் மன்னிக்க மறக்காதீர்.
நீங்கள் மன்னிப்புக் கேட்கையில் புனிதம் அடைகிறீர்கள்.
மன்னிப்புத் தருகையில் மேன்மை அடைகிறீர்கள்.
மன்னிப்பு வெறும் வார்த்தை அல்ல...
அது ஒரு பாதிக்கப்பட்ட மனதின் எதிர்பார்ப்பு...

# நாளுமொரு சிறு படி : நீடித்த வளர்ச்சிக்கு அடித்தளம்



யதுசனா சவுந்தரராசா
யாழ்ப்பாணம்

“அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்றார் ஔவையார். கிடைத்தற் கரிய பிறவி இம்மானிடப் பிறவி. மாந்தராய்ப் பிறந்தோர் பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்றில்லாமல் தமக்கென ஓர் அடையாளம் கொண்டு இலட்சியம் குறிக்கோள்கள் எனும் அம்சங் களை நோக்கிப் பயணிப்பது விலங்கு களிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டும் ஒரு விடயம் மட்டுமல்லாது வாழ்வினையும் சுவாரசியப்படுத்துகின்றது. வெற்றி எனும் கனியை ருசிக்க கடின உழைப்பு, நேரம், தியாகம் எனும் மூலதனங்களை இட்டுப் பயணிக்கும் போதும் சிலசமயங்களில் சோர்வு எம் சக்திக்கும் அப்பாற்பட்டு எம்மை வலுவிழக்கச் செய்து விடுகின்றது. உடல் ரீதியாக மட்டுமன்றி உளரீதியாகவும் அவ்வாறு சோர்வுற்ற மனத்தை ஆற்று வதற்கு நாம் நாடுகின்ற ஒரு விடயமே ‘ஊக்கம்’ (motivation) என்பதாகும். மனதிற்குப் புது உற்சாகத்தை ஏற்படுத்த வும் தன்னம்பிக்கையை உயர்த்தவும் இது உற்ற துணைபுரிகின்றது என்பதில் மாற்றுக் கருத்து ஏதுமில்லை. ஆனால் எம் முயற்சிகளுக்கான விளை திறனை அதிகரிப்பதில் ஊக்கத்திலும் பார்க்க தொடர்ச்சியாக நாம் செய்யும் சிறுசிறு படி முறைகளே பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஊக்கம் என்பது ஒரு தூண்டுதல். சிலசமயங்களில் வரும் பின்பு காணாமல் போய்விடும். ஆனால் தொடர்ச்சியான செயல் என்பது, நம்மை ஒவ்வொரு நாளும் சிறிது சிறிதாக உயர்த்தும் சக்தி கொண்டது.

ஊக்கம் எப்போது வரும் என்பது நமக்கே தெரியாது. சில நேரங்களில் ஒரு நல்ல திரைப்படம் பார்த்த பிறகு, சில நேரங்களில் ஓர் உற்சாகமான உரை கேட்ட பிறகு நம்முள் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உந்துதல் ஏற்படும். ஆனால் அந்த உணர்வு சிலமணி நேரங்களிலேயே மறைந்துவிடும். அந்த உணர்வை நம்பி நாம் திட்டமிட முடியாது. ஆனால் தினமும் ஒரே நேரத்தில் ஒரு செயலை செய்யும் பழக்கம் உருவானால், அந்தச் செயல் நம் வாழ்வின் ஓர் அங்கமாகிவிடும்.



மாணவன் ஒருவன் தினமும் ஒரு மணி நேரம் என்றவாறு படிக்கத் தொடங்கு கின்றான் எனில் ஆரம்பத்தில் சலிப்பாக இருந்தாலும் ஒருவாரம், பத்தாம் நாள் கடந்தவுடன், அந்த ஒரு மணி நேரம் இல்லாமல் அவர் நாளைச் செம்மையாய் உணர முடியாத நிலைக்கு வருவார். இது தான் பழக்கத்தின் சக்தி. இப்படியே ஒரு பயிற்சி தொடர, ஒரு மாதம் முடிவில் அவர் அதற்கேற்ப அறிவிலும், நம்பிக்கை யிலும் வளர்ந்திருப்பார். இதுவே, ஒரு நாள் மூச்சுவிடாமல் படித்துவிட்டு, பின்பு மூன்று நாட்கள் ஒதுக்கிவிடும் பழக்கத்திற்கு மாற்றாகும்.

உடற்பயிற்சி செய்யும் ஒருவர் எவ்வளவு நேரம் செய்வது முக்கியமல்ல. தினமும் நம்பிக்கையுடன், ஒரு முறை செய்ய ஆரம்பித்தால், உடலின் சக்தியும், நம்பிக்கையும் வளரும். ஒரு நாள் ஒரு மணி நேரம் செய்து, பிறகு ஓய்வெடுத் தால் உடல் பழகாது. ஆனால், தினமும் 20 நிமிடங்களே ஆனாலும், தொடர்ந்து செய்தால் அதன் வினைதிறன் மிக்கதா கின்றது. இதுவே பழக்கத்தின் சிறப்பம்சம்.

தொடர்ச்சியான செயல் நமக்குள் ஒரு தன்னம்பிக்கையை உருவாக்குகிறது. ஒவ்வொரு நாளும் நாம் நம்மை நம்பி செயலில் ஈடுபடும்போது, அது நம்முள் ஒரு நிச்சயத்தன்மையை உருவாக்குகிறது. நாம் ஒருவரிடம் சொல்லும் கடைசி வார்த்தை அல்ல நம் உண்மை. நாம் ஒவ்வொரு நாளும் செய்யும் செயல்தான் நம்மை வரையறுக்கிறது. வாழ்க்கையின் எந்தத் துறையையும் எடுத்துக் கொண்டா லும், தொடர் முயற்சியே வெற்றிக்குக் காரணமாக இருப்பதைக் காணலாம். ஓர் இசைக் கலைஞன், நாள்தோறும் பயிற்சி செய்யும்போது மட்டுமே இசையின் உன்னதத்தை உணர முடியும். ஒரு விவசாயி, அடை மழை பெய்யும் என்றாகி லும் புலம் சென்று பார்வையிடும் பழக்கத்தை விட முடியாது. இதுதான் அந்தத் தொழிலின்மீது அவர் கொண்டுள்ள பற்று.

மனதில் நினைத்ததை செயல்படுத்தும் பொழுது மட்டுமே அது உண்மையாகும். செயலின்றி எண்ணம் என்பது வெறும் கனவாகவே இருக்கிறது. அன்றாடம் சிறு சிறு செயலில் ஈடுபடும்போது, அந்த செயல்கள் பெரிதாகும். ஒரு நாள் நாம் செய்த சிறு வேலை, நாளை நமக்கு பெரிய வாய்ப்பாக மாறும்.

பலரும் வெற்றிக் கனியை விரைந்து சுவைக்க விரும்புகிறோம். ஆனால் அந்த விரைவில் நாம் திட்டமிட்ட செயலை செய்யாமல், நாளும் புதிய எண்ணத்தில் வாழ்க்கையை எதிர்கொள்கிறோம். இதனால் நம் செயல்களில் தெளிவும், தொடர்ச்சியும் காணமுடியாது. முடிவில், நாம் எதுவும் தொடங்காமலோ, முடிக்காமலோ விடுகிறோம்.

இங்குதான் தொடர்ச்சியின் சக்தி வெளிப் படுகிறது. தொடர்ந்து செய்யும் செயல், நம்மை ஒரு நடைமுறை மனிதராக மாற்றுகிறது. நாம் ஒரு சிறு பக்கம் எழுதும் பழக்கமோ, தினமும் ஒரு பாடம் கற்றுக்கொள்ளும் பழக்கமோ, மனதில் வளர்ச்சி என்ற எண்ணத்தை உறுதியாகப் பதிக்கிறது.

ஊக்கம் என்பது ஒரு தீயின் வெப்பம் போல. அதில் கை வைத்து நம் வாழ்க்கையை அமைக்க முடியாது. ஆனால் தொடர்ச்சியான செயல் என்பது பனிக்கட்டியை உருக்கி தண்ணீராக்குவது போன்றது. அது மெதுவாக ஆனால் உறுதியானது. திடீரென வெற்றி வரும் என்றோ, நாளடைவில் மாறுவோம் என்றோ நம்புவது தவறு. மாற்றம் என்பது நாள்தோறும் நாம் செய்யும் சிறு செயல்களில் உள்ளது.

ஒரு நாள் இரு நாள் முயற்சிக்கு ஓய்வு கொடுப்பது பெரிய குறையல்ல. ஆனால் அதற்குப் பிறகு முறையாக திரும்பிச் செய்வதுதான் முக்கியம். வாழ்வில் துயரமான நாள் வந்துவிட்டது என நாம் துவண்டு போய்விடக் கூடாது. அதிலிருந்து மீண்டு மீண்டும் முயற்சியைத் தொடரும் மனப்பாங்கே உண்மையான வெற்றிக்கான உயர் படி. சிறந்தது செய்ய முடியவில்லை என்றால், சிறிது என்றாலும் செய்யும் மனது வேண்டும்.

வெற்றி, ஆழ்ந்த அறிவு, நல்ல உடல் நிலை, பண்பாடு, தொழில் திறன் இவை அனைத்தும் தொடர்ந்து செயல்படும் நபருக்கு உறுதி. இன்று நாம் ஆரம்பிக்கும் ஒரு சிறு பழக்கம், நாளை நமக்கு புதிய வாழ்க்கையைத் தரும். ஆகவே, ஊக்கத்தை எதிர்பார்க்காமல், தினமும் ஒரு சிறு செயலைத் தொடங்குவோம் தொடருவோம். எம் வாழ்வின் மிகப் பெரிய வெற்றி, நாள்தோறும் நாம் ஏறுகின்ற சிறிய படிகளாலேயே கட்டப்படுகின்றது என்றால் மிகையில்லை.

# குபேரா – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

ஜூன் 2025ஆம் ஆண்டில் வெளியான இப்படத்தில் தனுஷ் உடன் நாகர்ஜுனா நடித்துள்ளார். தெலுங்கு மற்றும் தமிழ் மொழிகளில் இப்படம் எடுக்கப்பட்டது.

கோடீஸ்வரர் ஒருவர் தான் இன்னும் பணம் சம்பாதிக்க, தனக்கு சாதகமாக அரசாங்க மந்திரி ஒருவரை முடிவு ஒன்றை எடுக்கக் கேட்கிறார். அதற்காக மந்திரி பல கோடி ரூபாய் இலஞ்சம் கேட்கிறார். அப்பணத்தை தடயமில்லாமல் கைமாற்றும் முறை ஒன்றை கண்டுபிடிக்க, சிறையிலிருக்கும் CBI அதிகாரி ஒருவரை அக்கோடீஸ்வரர் விடுவிக்கிறார். நேர்மையாக வேலை செய்தபடியினால் தனது எதிரிகளால் குற்றம் சாட்டப்பட்டவர் CBI அதிகாரி தீபக் (நாகர்ஜுனா). மந்திரிக்கு இலஞ்சம் கொடுப்பதற்கு கோடீஸ்வரரான நீரஜ்இற்கு உதவ விரும்பாத தீபக், அவ்வாறு அவருக்கு உதவ வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுகிறார்.

இலஞ்சத்தைக் கைமாற்ற போலி நிர்வாகங்களும், அவற்றிற்குரிய நிர்வாகி களும் தேவை என்றும், அந்நிர்வாகிகள் தமது கட்டுப்பாட்டினுள் இருக்க வேண்டும் என்றும், அவர்கள் என்ன செய்கின்றனர் என்று விளங்காதவர்களாக இருக்க வேண்டும் என்றும் தீபக்கும், நீரஜும் தீர்மானிக்கின்றனர். இத்தகைய குணம் உடையவர்கள் படிப்பறிவு இல்லாத பிச்சை வாங்குபவர்கள் என தீபக் உணரு கிறார். இவ்வாறு தமது வேலைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பிச்சை வாங்குபவர் களில் ஒருவர் தேவா (தனுஷ்) ஆவார்.

தேவா அவர்களது சதியை விளங்கி கண்டு பிடிப்பாரா? தீபக் மனம் மாறுவாரா? என்ற கேள்விகளுக்குப் பதிலை இப்படத்தைப் பார்த்து அறியுங்கள்.

இப்படத்தின் சிறப்பு அதன் வித்தியாசமான கதையாகும். நேர்மையை இழக்கும் நிலை யில் நாகர்ஜுனா, பிச்சை எடுப்பவராக தனுஷ் மற்றும் கதாநாயகி சம்ராவாக ராஷ்மிகா ஆகியோரின் நடிப்பு தமது கதாபாத்திரங்களுக்கு ஏற்ற விதத்தில் அமைந்துள்ளன. இதனால் படம் நன்றாகச் செல்கிறது.

ஆனால் படத்தின் இரண்டாம் பாகத்தில் படம் தெளிவையும் திறமையையும் இழக்கிறது. இப்புதிய முயற்சியில் சில தேவையற்ற, பழமையான காட்சிகள் சேர்க்கப்படுகின்றன. உதாரணமாக கருவுற்றுள்ள இரு பெண்களும் மிகப் பழமையான விதத்தில் இறக்கின்றனர்.

இவர்களைவிட ஒரே பெண்ணான சமீரா கதையில் முக்கியமாக இருந்தாலும் இறுதியில் குழந்தையை காக்கும் வேலையுடன் விடப்படுகிறார்.



குறிப்பாக இப்படத்தின் முடிவு முழுமை இல்லாமல் இருக்கிறது. இருந்தாலும் தனுஷ், நாகர்ஜுனா ஆகியோரின் நடிப்பு நன்றாக இருப்பதால் இப்புதிய முயற்சி யைப் பார்த்து ஆதரிக்க விரும்புவோர் இப்படத்தைப் பார்க்கலாம்.

Vlambaram -August 01, 2025 .qxp_Vlambaram-Front 2025-08-01 3:28 PM Page 20



# தாழ்த்தும் தற்பெருமை- நாடும் நடப்பும்



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

ஆணவமின்றி அடக்கமாக இருப்பது பெருமை. தன்னைப்பற்றி ஆணவம் கொள்வது தற்பெருமை. தன்முனைப்பு அதாவது தன்னை முன்னிலைப்படுத்துவதுடன் தன்னை உயர்வாகக் கருதிக் கொள்வது, தான் என்ற எண்ணம், அகந்தையால் தலைக்கனம் கூடிவிடுதல் தற்பெருமை. தன்னைப்பற்றியே சிந்தித்தல், பணிவின்மை, உயர்வு மனப்பான்மை, வறட்டுக் கௌரவம், கர்வம், திமிர், அகங்காரம், இறுமாப்பு, வீண்பெருமை, தற்புகழ்ச்சி ஆகிய குணங்களின் ஒட்டு மொத்த வெளிப்பாடாகும். மனிதனுக்குப் பணம், பதவி, அழகு, செல்வாக்கு கூடும் பொழுது, அதேநேரத்தில் படிப்படியாக மமதை, ஆணவம் செருக்கு, கௌரவம் சிலருக்கு கூடிவிடுகிறது. அதன் விளைவே தற்பெருமை. தற்பெருமை என்பது (ஆணவத்தோடு) உண்மையை மறுப்பதும், மக்களை இழிவாகக் கருதுவதும்தான். மேலும், திறமைகளில் மற்றவர்களைவிடத் தன்னை உயர்ந்தவராகக் கருதுவதும், பிறரை துச்சமாகவும், கேவலமாகவும் மதிப்பிடுவதுமாகும். நான் என்ற மமதை உள்ளோருக்குத்தான் தற்பெருமை இருக்கும். நல்ல குணமாகிய பெருமையும், கெட்ட குணமாகிய தற்பெருமையும் தெளிந்து அறிய அவர்களது நடத்தையே உரைகல்லாகும்.

தற்பெருமை கொண்ட மனிதன் உண்மையை மறைத்து மற்றவர்களுடன் நடந்து கொள்வான். நான்தான் கெட்டிக்காரன் என்று நினைத்து நடப்பான். என்னைவிட ஆள் இல்லை என்ற மிடுக்கில் நடந்துகொள்வான். இவர்களது மனம் தூய்மையானதாகக் காணப்பட மாட்டாது. தன்னை ஆதரிப்போருடன் மட்டும் பழகுவர். தம்மை நாடியே பிறர் வரவேண்டும் என நினைப்பர். தன்னைவிட மற்றவருக்கு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது என எதிர்பார்ப்பர், தான் மட்டும்தான் சிறப்பானவர் என நம்புவர், மற்றவர் தன்னை மதிக்க வேண்டும், புகழ வேண்டும் என்பதில் தீராத ஆசை கொள்வர், தன்னை முந்திச் செல்வோர் மீது பொறாமைப்படுவர், தவறு செய்தாலும் மன்னிப்புக் கேட்க விரும்பமாட்டார்கள், தன்னை சாதாரண மனிதனாக நினைத்துக்கொள்ள மாட்டார்கள், பிறர் தன்னை குறைவாக மதிப்பிடுவார்கள் என்ற நினைப்பில் தம்மை பெரிய ஆளாகக் காண்பிக்க முயல்வர். இப்போது தற்பெருமையாளர்களை இனங்கண்டிருப்பீர்கள். தற்பெருமை அறியாமையின் ஆணவத்தால் உருவானது. எல்லா அறியாமையும் தற்பெருமையாகாது. ஆனால் எல்லாத் தற்பெருமையும் அறியாமையே. தற்பெருமை ஒருபோதும் எவரையும் மனிதனாக்காது.



தற்பெருமை அழிவின் விளிம்பேயாகும். கர்வம் உடையோராக, வீண்பெருமை உடையோராக இருப்போரை மக்கள் நேசிப்பதில்லை. இவர்கள்தான் அதிகம் உலாவுகின்றனர். இவர்கள் மக்களால் நிராகரிக்கப்படுவர், நிராகரிக்கப்படுகின்றனர். தற்பெருமை பேசுவது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமம். தற்பெருமை எங்கு முடிகிறதோ அங்கு கண்ணியம் ஆரம்பமாகிறது. தற்பெருமை ஒருவனை அடியோடு சாய்த்துவிடும். ஒருவனுக்கு இருக்கக் கூடாதது தற்பெருமையாகும். இதை கொண்டவரது குடும்பம் பெருமையாக வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. இவர்களது உடல் அழிந்தாலும் இவர்களது தற்பெருமைக்கான அடையாளங்கள் என்றுமே அழியாது. அவை இழிவாகப் பேசப்பட்டுக்கொண்டே இருக்கும். அது அவர்களது சந்ததிக்கும் கடத்தப்படுவதும் தவிர்க்க முடியாததாகும். தற்பெருமை ஒருவருடன் சேர்வது அல்லது தற்பெருமையாளருடன் ஒருவர் சேர்வது அவன் வாழ்வுக்கு தரித்திரம் ஆகும். இவர்களை மக்கள் எளிதில் இனங்காண்பர். இவர்களுடன் நட்புறவு கொள்ளல் தீமையில்தான் முடிகின்றது.

இவர்களைவிட்டு விலகி வாழ்வதே சிறப்பு. இவர்களுக்கு எதிராகச் செயல்பட்டால் முடிவில் எமக்குத்தான் தொல்லைகள், மன உளைச்சல் ஏற்படும். இவர்களைச் சமாளித்துக்கொண்டு பழகுபவர்களும் உள்ளனர். இவர்களுக்கு அடிமையாக வாழ்பவர்களும் உள்ளனர். இவர்களைச் சமாளிப்பதும் கடினம்தான். பொதுவாக இவர்களைவிட்டு விலகினால்தான் அமைதி கிட்டும். தற்பெருமையால் வாழ்க்கை நொறுங்கிப் போனவர்கள் பலர். வாழ்வில் சரிந்து விழுந்து சகதியில் புரண்டதெல்லாம் தற்பெருமை என்கிற உயிர்க் கொல்லியால்தான். இதனால் முகவரி இழந்து காணாமல் போனவர்களும் ஏராளம். தற்பெருமை மனிதனின் மிகவும் மோசமான எதிரி. நம்முள் இருக்கும் தற்பெருமை எனும் மிகப் பெரிய ஆயுதம் நம்மையே கீழே தள்ள நம்மாலேயே பயன்படுத்தப்படுகிறது என்பதுதான் உச்சக்கட்ட சோகம்.

“பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து” பெருமை உடையவர் எக்காலத்திலும் பணிவோடு நடப்பர். ஆனால் சிறியோர் தம்மைத்தாமே புகழ்ந்து கொள்வர். எனவே தற்பெருமை அல்லது தற்புகழ்ச்சி என்பது சிறியோரின் குணம் என்பதை வள்ளுவர் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். நம் பண்பாட்டிற்கு மிகவும் பொருந்தாத தீவிரத் தொற்று வியாதி தற்பெருமையாகும். சில மனிதர்களின் குணாதிசயங்களில் இதுவும் ஒன்று ஆகும். அதேவேளை எல்லாமே இருந்தும் அடக்கமாக, சமூகத்துக்கு உபயோகமாகவும் வாழ்ந்து, பலருக்கும் முன்னுதாரணமாக வாழ்வோரும் எம்மத்தியில் உளர். உங்களிடம் ஏதாவது ஒன்று அதிகமாக மற்றயவனிடம் இல்லாத ஒன்று இருக்கும் பொழுது அவனிடம் கொஞ்சம் பணிவாக நடந்தால் சமூகம் சிறக்கும்.

பக்குவப்பட்ட மாமனிதர்கள் தன்மீதான தவறு சுட்டிக் காட்டப்படும்போது கொந்தளிப்பதில்லை. திருத்திக்கொள்ளவே முயற்சிக்கின்றனர். மனிதனின் அறிவாற்றல், நல்லெண்ணம், நற்செயல் அதிகரிக்கும்போது தற்பெருமை குறைந்துவிடுகிறது. தற்பெருமையை விட்டுவிட்டு மற்றவற்றில் கவனத்தைச் செலுத்தி முன்னேற்றத்திற்கான வழியை தேடுவோமாக.

என்னை மதிக்காதவர்களை நானும் மதிப்பதில்லை. தற்பெருமையை இழப்பவர்களே தலை நிமிர முடியும். தற்பெருமை கூடினால் இறங்கிவிடுங்கள். இல்லையேல் தலைகீழாக விழ நேரிடும். எனக்குத் தெரியும் என்பதில் தொடங்கி, எனக்கு மட்டும்தான் தெரியும் என்பதில் ஆரம்பமாகிறது தற்பெருமை. உனக்கு மேலே உள்ளவனைப் பார்த்து ஏங்காதே. தாழ்வுமனப்பான்மை வரும். கீழே உள்ளவனைப் பார்த்து ஏளனமாக சிரிக்காதே தற்பெருமை வரும் உனக்கு. உன்னை யாரோடும் ஒப்பிட்டுப் பார்க்காதே. நீ நீயாக இரு தன்னம்பிக்கை தானாக வரும். தற்பெருமை உள்ளவர்களுடன் பேசாதே, பழகாதே. மனதுக்கு பிடித்தவர்களிடம் மனம் விட்டுப் பேசினால் மரணவலிகூட மரத்துப்போகும்.தற்பெருமை என்பது தேவையில்லாத இலக்கணம்.

தற்பெருமையாளனே திருந்திக்கொள் இல்லையேல் திருந்த வைப்பார்கள் யாராவது ஒருவர். நூல் அறுந்தபோதுதான் பட்டத்துக்குத் தெரிந்தது உயரம் தனதல்ல என்று. தேகத்தின் எதிரி சந்தேகம். வாதத்தின் மிகுதி தீவிரவாதம். நட்பின் கேடு கூடா நட்பு. கனத்தின் கெடுதி தற்பெருமை. புகழ்ச்சியின் உச்சம் தற்புகழ்ச்சி. கொழுப்பின் எச்சம் வாய்க் கொழுப்பு. வானம் பார்த்த பூமியாய் வறண்டு கொண்டிருக்கிறது மனிதநேயம். எங்கு தேடினும் தற்பெருமையைத்தான் காணமுடிகிறது. கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கிவிடும். தோல்வி வந்தால் காத்திருப்போம். வெற்றி வந்தால்



வரவேற்போம். தோல்வி வந்தால் தலைகுனியக் கூடாது. வெற்றி வந்தால் தற்பெருமை கூடவே கூடாது.

நல்லொழுக்கம், நற்பண்புகளும் நிறைந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு மனிதனும் ஒழுக்க சீலர்களாக திகழவேண்டும். ஆனால் அந்த இலட்சியத்தை அடைய பெரும் தடையாக இருப்பது மனிதர்களிடம் காணப்படும் தற்பெருமை என்ற தீயகுணமாகும். எவன் பாவங்களின் பிறப்பிடமாகிய தற்பெருமை எனும் நோயினை மனதில் வளர்க்கிறானோ அவன் தீமைகளின் ஒட்டு மொத்த உருவமாக மாறிவிடுகின்றான். அனைத்து இழிகுணங்களின் பிறப்பிடமாகத் திகழ்வது தற்பெருமையாகும். இந்த தீயகுணத்தை நமது உள்ளத்திலிருந்து வேரோடு பிடுங்கி எறிந்துவிட வேண்டும்.

ஒருவரிடம் பணிவு இல்லாதபோது அந்த இடத்தை தற்பெருமை ஆக்கிரமித்துவிடுகிறது. நிமிர்ந்து வாழ வீடு இருந்தாலும், பணிந்து நடக்க வாசல்படி வேண்டும். எவரும் எவரின் மீதும் வரம்பு மீறக்கூடாது. உள்ளத்தில் பெருமை தோன்றினாலும் அது வெளிப்படும் நபர்களை வைத்து பலவிதமாகக் காட்சி தருகிறது. மொழிப் பெருமை, குலப்பெருமை, பணப்பெருமை, பதவிப்பெருமை, மண்பெருமை, தற்பெருமை போன்ற வடிவங்களில் பரிணாமம் பெறுகிறது. தற்பெருமையற்ற பெருவாழ்வு வாழ தற்பெருமையை துரத்திக்கொண்டு ஓடாதே. நீ அதை விட்டு விட்டால் அது விரைவில் தானாகவே செத்துவிடும். தாழ்த்தும் தற்பெருமையை தவிர்த்து தன்னிலை உணர்ந்து மென்மையாய் நடந்து நந்நிலைபெற்று நானிலத்தில் நல்வாழ்வு வாழ்வோமாக.



## படித்ததில் பிடித்தது

நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை
மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatico.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

## வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவை



1. சுருண்டு படுக்காதீர்கள்.
2. உட்காரும்போது வளையாதீர்கள்.
3. நிற்கும்போது நிமிர்ந்து நில்லுங்கள்.
4. வாகனம் ஓட்டும்போது குனிந்து ஓட்டாதீர்கள்.
5. கனமான தலையணைகளைத் தூக்கி எறியுங்கள்.
6. தினமும் 30 நிமிடம் வேகமாக நடவுங்கள்.
7. ஒரு மணித்தியாலத்திற்கு மேல் தொடர்ந்து உட்காராதீர்கள்.
8. உடற்பயிற்சியின்போது குனிந்து காலைத் தொட்டு நிமிருங்கள்.
9. பாரமான பொருட்களைத் தூக்கும்போது குனிந்து தூக்காதீர்கள்.
10. தினமும் காலை, மாலை 20 முறை கைகளை வான் நோக்கி நீட்டுங்கள்

- புகழினி